# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 08 சுகந்தம் : 30 (ஆடி-புரட்டாதி) 2015




கந்தையா ரெட்ணையா

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!



"தென்றலுடன்"
மகாநதியின் சங்கமம்
உங்கள் சகலவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும்...
மகாநதி பிறைவேற் லிமிட்டட்
வைத்தியசாலைவீதி,
களுவாஞ்சிகுடி.
AD/043
மகாநதி பிறைவேற் லிமிட்டட்
306, திருமலைவீதி,
மட்டக்களப்பு.

ஆரம்பம் : 06.04.2008

# தென்றல்

# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com
இணையம்:- www.thendralbook.com

**ஆசிரியர்**

க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**

திரு. வீ. கே. ரவீந்திரன் (ரவிப்ரியா)
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஓவியம்**

வே. ஹோகுலரமணன்

**கணனி வடிவமைப்பு**

த.சங்கர்

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)

## ஐந்தாவது கண்ணகி விழா!!!

காவிய நாயகியான கண்ணகிக்குத் **"திருமாமணி நங்கை வந்தாள்! எங்கள் தேசந் தளைத்திட வந்தாள்!! வந்தாள்!!!"** என்ற மணிமகுடத்துடன் மட்டக் களப்பு வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயத்தில் பல நூற்றுக் கணக்கான பேராளர் கள், கவிஞர்கள், பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், பார்வை யாளர்கள் எனப் பலதரப்பட் டோர் திரண்டிருக்க கண்ணகி கலை இலக்கிய விழா கடந்த ஆனி மாதம் 13, 14 ஆம் திகதி களில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழா இரு தினங்களிலும் ஆய்வரங்குகள், கலை நிகழ்வு களை உள்ளடக்கியதாக முழு நாள் நிகழ்வாக **"கண்ணகி கலை இலக்கியக் கூடல்"** ஏற்பாட்டுக் குழுவால் ஒழுங்கமைக்க பட்டிருந்தது.

இவற்றில் விழாக்குழுத்

தலைவர் த.கோபாலகிருஷ்ணனின் தொடக்கவுரை, **"கூடல்"** விழா மலர் வெளியீடு, நூலங்காடி என்பவற்றோடு பண் பாட்டுப் பேரணியும் சிறப்பாக அமைந்தது. இவற்றோடு ஆய்வரங்குகள், கலை நிகழ்வுகளும் இலக்கியத் தேடலுக்கு உந்துசக்தியாக அமைந்தது.

இவ்வாறாக இலக்கியப் புரட்சிக்கு வித்திட்ட ஐந்தாவது கண்ணகி கலை, இலக்கிய விழா சிறப்புடன் நிறைவு பெற்றது. கண்ணகி விழா வருடா வருடம் எதுவித தடையுமின்றி நடைபெற வேண்டும் என்பதே தென்றலின் பிரார்த்தனையாகும்.

என்றென்றும் அன்புடன்

-ஆசிரியர்-

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

**ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.**

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

**அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.**

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமி யங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கி யங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற் றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம்-



# ஓடு மீன் – சிறியமீன்
# உறுமீன் – பெரியமீன்
# சொல்வதுசரியா?



உலகெலாம் தமிழ் மொழி பரவியுள்ளது. தமிழ் மொழியில் ஒருசொல்லுக்குப் பலபொருள்கள் உள்ளன. ஒருபொருளுக்குப் பலசொற்கள் உள்ளன. **"எழுத்தேதனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்"** என்று நன்னூல் கூறுகின்றது. **"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"** என்பது தொல்காப்பியர்வாக்கு. தமிழ்ச் சொற்களை திணை, பால், எண், இடம், காலம், வினா, விடை, மரபு என்ற வகையிலும் பெயர், வினை, இடை, உரி என்ற வகையிலும் பிரித்துநோக்கலாம். மேலும் போலி, தொகை, விரி, பெயரெச்சம், வினையெச்சம், முற்று, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடுக்குத் தொடர், அடுக்கிடுக்குத் தொடர், இரட்டைக் கிழவி, இணைமொழி என்ற வகையிலும் பகுத்துப் பார்க்கலாம்.

கூரைக்கு ஓடு வேய்ந்தான்.

நீவேகமாக ஓடு.

மழையோடு (ஓடு) காற்றுவீசியது.

என்ற தொடர்களிலே **"ஓடு"** என்ற சொல் வெவ்வேறு பொருள் சுட்டுவதை உணரலாம். இதனாலேதான் தமிழில் சொற்களுக்குப் பொருள் பார்க்கும் போது

**"இடம் நோக்கிப் பொருள்கொள்க"** என்றனர்.

உரிச்சொற்கள் பற்றிக் கூறவந்தநன்னூலார்:-

**"சாலஉறுதவநனிகூர்கழிமிகல்" (நன்-456)**

என சூத்திரம் யாத்தார். மேற் சொன்ன ஆறுசொற்களும் உரிச்சொல்லாக வரும்போது **"மிகுதி,அதிகம்"** என்றபொருளைத் தரும். **"ஆலயம் தொழுவதுசாலவும் நன்று", " பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"** என்ற தொடர்களிலே **"சால"** என்பது **"மிகவும்"** என்ற பொருளைத் தருகின்றது. **"உறு"** என்ற உரிச்சொல்லுக்கு **"உறுவளிதுரக்கு முயர்சினைமாவின், உறுபசியும் ஓவாப் பிணியும்"** என்ற உதாரணங்களைக் கூறலாம். இவற்றில் உறுவளி என்பது பெருங்காற்றையும் உறுபசி என்பது பெரும் பசி, கடும்பசி என்பதையும் உணர்த்துகின்றன. தமிழ் அகராதியில் **"உறு"** என்ற சொல் உரிச்சொல்லாக மட்டுமன்றி உறு என்னும் ஏவல் வினையடியாகவும் வரும் என்ற விளக்கம் உண்டு. வினையடியிலிருந்து வினைச் சொற்களை உருவாக்குவது தமிழ் மரபு. காலம் காட்டுவது வினைச் சொற்களின் சிறப்பியல்பு. ஏவல் வினையடி என்பது கட்டளையிடும் வடிவத்தில் அமையும். தனக்கு முன்னால் உள்ள ஒருவருக்கு அச்செயலைச் செய்யும் படி கட்டளையிடும் விதமாக அமைந்திருக்கும். **'நடு'** என்ற வினையடியிலிருந்து நட்டான், நடுகின்றான், நடுவான் என்றும், **'பெறு'** என்ற வினையடியிலிருந்து பெற்றான், பெறுகின்றான், பெறுவான் என்றும் -வினைச் சொற்களை உருவாக்கலாம். அவ்வாறே **"உறு"** என்ற வினையடியில் இருந்து உற்றான், உறுகின்றான், உறுவான் என்ற சொற்களை உருவாக்கலாம். உடுக்கை இழந்தவன் கைபோல உற்ற இடத்தில் உதவுகின்றவர்களையே **"உற்றார்"** என்றுகுறிப்பிட்டனர் போலும்.

இராம - இராவண யுத்தத்தில் முதலாம் நாளில் போரில் தோற்ற இராவணனை **"இன்று போய் போர்க்கு நாளைவா"** எனக் கூறி, இராமன் அனுப்புகிறான். மீண்ட இராவணன் தன் தம்பி கும்பகர்ணனை துயில் எழுப்பி போர்க்கோலம் செய்கின்றான். போர் மூண்டதை அறியாத கும்பகர்ணன் போர்க் கோலம் எதற்காக?என்றுகேட்கின்றான். நடந்ததை அறிந்து வருந்திய கும்பகர்ணன் சீதையைச் சிறைவிட்டு இராம, இலட்சுமணரோடு சமாதானம் செய்யும்படி இராவணனுக்கு அறிவுரை கூறுகின்றான். சீற்றம் கொண்ட இராவணன் நடக்கப்போவதை அறிந்துகொள்வதற்காக உன்னை அழைக்கவில்லை. நீ

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



அமைச்சனும் அல்லை என்று ஏசுகின்றான். "உறுவது தெரியவன்று உன்னை கூயது. அறிவுடை அமைச்சன் நீயல்லை" என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடியுள்ளார். "உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறு கண் செய்யாமை அற்றேதவத்துக்கு உரு" என்றார் திருவள்ளுவர். இச்சொற்றொடர்களிலே "உறு" என்றசொல் வினையடியாக பயின்றுள்ளதைக் காணலாம். சொற்றொடர்களிலே "உறு" என்றசொல் உரிச்சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் கையாளப்படுகின்றது. "உறுபடை" (குறள்-498), "உறுவளி" (குறுந்தொகை-பாடல்-278), "உறுவிழுமம்" (குறுந்தொகைபாடல்-397), "உறுபகை" (கம்பராமாயணம் -பரசு-34), "உறுவலித் துணைவர்" (கம்பராமாயணம் -கடல்தாவு -14) என்ற இச்சொற்றொடர்களிலே பெரிய, மிகுதி, அதிகம் என்ற பொருளை உணர்த்துகின்ற உரிச் சொல்லாக பயின்றுள்ளது. "உறுதல்" (குறள்-628,629), "உறுபகை" (குறள்-744), "உறுபொருள்" (குறள்-756), "உறும்" (குறள்-639,816,817), "உறுவது" (குறள்-813), "உறுசெறுநர்" (பத்துப்பாட்டு -மதுரைக்காஞ்சி - வரி-153), "தமியன் விதியால் மயக்கம் உறுவேனோ" (திருப்புகழ்) மேலே காட்டப்பட்ட சொற்றொடர்களிலே "உறு" என்றசொல் வினையடியாகச் செயற்பட்டுள்ளதைக் காணலாம். எனவே சொற்றொடர்களிலே உறு என்ற சொல்லை காணும் போது அது உரிச் சொல்லாகவா அல்லது வினை அடியாக வாகையாளப்பட்டுள்ளது என்பதை நின்று நிதானித்துப் பார்க்கவேண்டியுள்ளது. அவசரப்பட்டு உரிச்சொல் என்றோ வினைச் சொல் என்றோ முடிவெடுக்கக் கூடாது.

உலகியலை நன்குணர்ந்த தமிழ்ப் புலவர்கள் தமது அனுபவத்தை பிறருக்கும் பயன்படும் வண்ணம் பாடல்களில் பாடிவைத்துள்ளனர். இலக்கியநயமும் இலக்கண நுட்பங்களும் அமைந்த இப்பாடல்களை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு பாடநூல்களில் உள்வாங்கியிருப்பது வரவேற்கக் கூடியதாகும். அந்த வகையில் தமிழ் மூதாட்டியான ஔவையார் பாடியவாக்குண்டாம் என்ற நூலிலிருந்து பின்வரும் பாடல் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.


**"அடக்கம் உடையார் அறிவிலர் என்றுஎண்ணிக்**
**கடக்கக்கருதவும் வேண்டாம் மடைத்தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு"**

இப்பாடல் கல்வித் திணைக்களத்தின் பத்தாம் வகுப்புதமிழ்ப் பாட நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அடக்கமாகவும் பொறுமையாகவும் தக்கதருணம் பார்த்து காத்திருப்போரை அறிவற்றவர் எனக்கருதி இலகுவில் வென்றுவிடலாம் என்று நினைக்கக் கூடாது என்பது இப்பாடலின் பொருள். இதனை விளக்குவதற்கு நல்லதோர் உவமை கையாளப்பட்டுள்ளது. மடைத்தலையில் வாடியிருக்கின்ற கொக்குதக்க தருணத்தில் தனக்கேற்ற மீனைப் பிடிக்கும். இதனையே **"கொக்கொக்ககூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து"** (குறள்-490) என்றார் வள்ளுவர். **"வினைமேல் செல்லாதிருக்கும் காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல இருக்க, மற்றைச் செல்லுங்காலம் வாய்த்த வழி அதுசெய்து முடிக்குமாறு போலத் தப்பாமல் செய்து முடிக்க"** என்று பரிமேலழகர் மிகத்தெளிவானஉரை எழுதியுள்ளார். மடைத்தலையில் ஓடுமீன் ஓட உற்ற இடமும்தருணமும் உற்ற அளவான மீனும் வரும் வரை ஓடுமீனை ஓடவிட்டு வாடியிருக்கின்றது கொக்கு.

நீரிலே வாழும் மீன்களிலே பல இனங்கள் உள்ளன .அவற்றின் உருவமைப்பும் பருமன்களும் வேறுபட்டவை. மிகச் சிறிய மீன்களும் மிகப்பெரியமீன்களும் நீரிலே ஓடித்திரியும். வெளியிலே முள்ளுள்ள கெளிறு (கெளுத்தி), சுங்கான் முதலிய மின்களைக் கொக்குகள் கொத்துவதற்கு விரும்புவதில்லை. **"சனியன் பிடித்த கொக்கு கெளுத்தியைப் பிடித்து விழுங்கி முள்ளுப் பொறுத்துச் செத்ததாம்"** என்று கிராமத்தவர்கள் சொல்வார்கள். குளங்களிலே நெற்றியில் வெள்ளைப் புள்ளியோடு திரிகின்ற மிகச் சிறிய மீன்களை **"நெற்றிப்பொட்டன்"** (மஞ்சள் பொட்டன்) என்று கூறுவர். நன்னீர் மீன்களில் வரால், கயல் என்பன வாய பெரிய மீனினங்களும் உள. கொக்கினங்களில் மிகச் சிறிய **"உண்ணிக் கொக்கு"** தொடக்கம் பெரிய **"நாரைக் கொக்குகள்"** வரை உருவத்தில் வேறுபட்டுள்ளன. சிறிய உண்ணிக் கொக்கு பெரியமீன்களை பிடிப்பதற்கு எத்தனிப்பதில்லை. பெரிய நாரைக் கொக்குகள் நெற்றிப் பொட்டன் போன்ற சிறியமீன்களைப் பிடிப்பதற்கு முயற்சி செய்வதில்லை. கருமமே கண்ணாக வாடியிருக்கும் கொக்கு தன் முயற்சிக்கு ஏற்ற பயன் பெறும் வகையிலேயே மீன்களைப் பிடிக்கும். அதற்காகவே ஓடு மீனை ஓடவிட்டு உறுமீன் வருமளவும் காத்திருக்கின்றது.

ஓடு மீன், உறுமீன் என்பவை காலங்கரந்த பெயரெச்சமாக உள்ளன. இவற்றை வினைத் தொகை என்று இலக்கணம் கூறும். ஓடியமீன், ஓடுகின்றமீன், ஓடும்மீன், உற்றமீன், உறுகின்றமீன், உறும்மீன் என்றுவிரித்துக் கொள்ளலாம். பாடநூலில் பொழிப்புரையிலே **"ஓடுமீன் ஓட"** என்பதற்கு **"ஓடும் சிறியமீன்களை ஓடவிட்டு"** என்று விளக்கம் எழுதப்பட்டுள்ளது. சிறிய, பெரிய என்பது ஒப்பீட்டு அளவிலான பிரயோகமாகும். **"சிறியமீனை ஓடவிட்டு பெரியமீனுக்காகவே கொக்குக் காத்திருக்கின்றது"** எனக் கூறுவது பொருத்தமானதா? என்ற சந்தேகம் எழுகின்றது. உண்ணிக்கொக்கு பெரியவரால், கயல் மீன்களுக்காகக் காத்திருக்கின்றதாக பொருள் கொள்ள முடியாது. உறுமீன் என்பதற்கு பொழிப்புரையிலே **"தன் உணவுக்கு ஏற்றமீன்"** என்று விளக்கம் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானதும் ஏற்புடையதும் ஆகும். ஆனால் அரும்பத வுரையில் உறுமீன் என்பதற்கு **"பெரியமீன்"** என்றுவிளக்கம் எழுதப்பட்டுள்ளது. பொழிப்புரையில் **"தன் உணவுக்கு ஏற்ற மீன்"** என்று சொல்லியிருக்க அரும்பதவுரையில் பெரியமீன் என்று சொல்லியிருப்பது மயக்கம் விளைவிப்பதாக உள்ளது. இப்பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் பலகேட்கப்படலாம். பாடலின் பொழிப்புரையை எழுதும் படி அல்லது இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அணியை இனங்கண்டு விளக்கும்படி கேட்கப்படலாம். ஓடுமீன், உறுமீன் என்ற சொற்றொடர்களின் பொருட் சிறப்பை விளக்கும் படிவினாக்கள் அமையலாம். சிலவரிகளுக்கு அடிக்கோடிட்டு அதன் சிறப்பை விளக்கும்படி கேட்கப்படலாம். பாடநூலில் இவை பற்றிய தெளிவு காணப்படவில்லை. ஓடுமீன்- சிறியமீன், உறுமீன்- பெரியமீன் என்று பரீட்சாத்திகள் விடைஎழுதினால் பரீட்சை மதிப்பீட்டாளர்கள் அதனை ஏற்றுக் கொண்டு முழுமையான புள்ளி வழங்குவார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது. பரீட்சையில் வினாவுக்கு விடையெழுதும் போது ஓடுமீன், உறுமீன் என்பவற்றுக்குப் பரீட்சாத்திகள் எவ்வாறு விடை எழுதுவது என்பதை இதனோடு தொடர்புடையவர்கள் பகிரங்கமாக தெளிவு படுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரை மூலம் எத்திவைக்கப்படும் செய்தியாகும்.

## கந்தையா ரெட்ணையா



மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை எழில் கொஞ்சும் வந்தாரை இன்முகத்துடன் வர வேற்கும் குறிஞ்சாமுனைக் கிராமத்தில் பிறந்து, தனது தபால் விநியோகக் கடமைக்கு மத்தியிலும்- கலை, இலக்கியப் பணியாற்றி வரும் கந்தையா ரெட்ணையாவைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

# தென்றலின் தேடல்

– க. கிருபாகரன் –

**குடும்பப் பின்புலம்**

இவர் குறிஞ்சாமுனைக் கந்தையா பாலாத்தை தம்பதியினருக்கு 02.09.1963 அன்று மகனாகப் பிறந்தார். தனது வாழ்க்கைத் துணையாக கன்னன்குடாவைச் சேர்ந்த கல்பனாவைத் தேர்ந்தெடுத்தார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

**பாடசாலைக் காலம்**

தனது ஆரம்பக் கல்வியை குறிஞ்சாமுனை அ.த.க.பாடசாலையில் கற்றார். தரம் 6 -10 வரை கன்னன்குடா மகாவித்தியாலயத்திலும் மேற் கொண்டார். தனது குடும்பக் கஸ்டநிலை காரணமாக தரம்10 உடன் கல்வியை இடைநிறுத்தினார்.

**கலைத்துறை**

1985 முதல் வானொலி, பத்திரிகைகளுக்குக் கவிதை எழுதி வருகிறார். இவரின் கன்னிக் கவிதை 1986.08.24 ஆம் திகதி **"படரும் நினைவுகள்"** எனும் தலைப்பில் **"சிந்தாமணி"** பத்திரிகையில் பிரசுரமானது. தொடர்ந்து அக்காலப் பகுதியில் **"சிந்தாமணிப்"** பத்திரிகையில் ஐம்பதுக்கு மேற்பட்ட

கவிதைகளை காதல், தத்துவம், சீர்திருத்தம், சீதனக் கொடுமை, பெண்ணின் பெருமை, இறைவன், இயற்கை எனப் பல கோணங்களில் படைத்திருக்கிறார். தற்போது **"வீரகேசரி வாரமலர்"**, **"தென்றல் சஞ்சிகை"** ஆகியவற்றுக்கு தனது அழகு தமிழால் எழுதிக் கொண்டிருக்கிறார்.

**நாடகத்துறை**

1990 -1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிஞ்சாமுனையில் **"சிவசக்தி கலைக்கழகத்தை"** உருவாக்கினார். இக் கலைக்கழகம் மூலமாகப் பல மேடை நாடகங்களை எழுதி, பழக்கி – தானும் பங்கு கொண்டு மேடையேற்றியுள்ளார். இவற்றில் **"நிலை மாறும் உலகில்"**, **"ஏமாந்த நெஞ்சம்"**, **"நூலறுந்த பட்டங்கள்"** ஆகிய சமூக நாடகங்களையும் – **"சாதிகள் இல்லையடி"** என்ற சீர்திருத்த நாடகத்தையும் – **"மூட நம்பிக்கைகள்"**, **"கணக்கிலும் வல்லவர்கள்"** – ஆகிய நகைச்சுவை நாடகங்களையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

**வானொலி**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் இடம்பெறும் பாவளம், கவிதைக் கலசம், குன்றின் குரல், இளைஞர் மன்றம்போன்ற நிகழ்ச்சிகளில் இவரது 75 க்கும் மேற்பட்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**மெல்லிசைப் பாடல்கள்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தேசிய சேவையில் **"பிஞ்சுமொழி பேசுகின்ற சின்னக் குயிலே..."**, **"கனவுகளெல்லாம் கற்பனைகள்..."**, **"திங்கள் போல் வந்த ராஜாவே...."**, **"நித்தம் நித்தம் நீயிருந்தால்.."**, **வசந்தகாலம் பிறந்து வர.."**, **"இல்லமெங்கும் இன்பம் பொங்க..."**, **"பொங்கும் மங்களம் பொங்கும் மங்களம்..."**, **பூவினம் மலர்ந்திருக்கும் நேரம்..."** போன்ற 10 பாடல்கள் முத்தழகு, ரகுநாதன், மகிந்தகுமார், அமுதன் அண்ணாமலை, இருதயம் – தயாளன், கலாவதி சின்னச்சாமி, வஜனேஸ்வதி சண்முகரெத்தினம், ராணி ஜோசப் போன்றோரின் குரலில் ஒலிபரப்பாகியுள்ளன.

**மேடைக் கூத்து**

2014 இல் **"வாழ்வு தந்த வடிவேல்"** சமூக சீர்திருத்த டிஸ்கோ மேடைக் கூத்து **"கண்ணகி முத்தமிழ் மன்றத்தினரால்"** மேடையேற்றப்பட்டது.

இலங்கையின் ஆற்றல் மிக்க - மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "**தென்றலின் தேடல்**" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**எழுதி வெளியிட்ட நூல்கள்**

☞ 1992 இல் இவரது சொந்த முயற்சியில் **"உதயம் பல்சுவை விருந்துப் பாடல்கள்"** (சிறுவர்களுக்கானது)

☞ 2013 இல் கன்னன்குடா கண்ணகி முத்தமிழ் மன்றத்தினரால் **"கண்ணகி அம்மன் காவடிப் பாடல்கள்"** வெளியிட்டு வைக்கப்பட்டது.

பெற்ற பரிசுகள்

☞ 1990 இல் மட்டக்களப்பு இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய மரபுக் கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றார்.

☞ 1991 ஆம் ஆண்டு **"வீரகேசரி"** பத்திரிகையும் - மட்டக்களப்பு இந்து கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றார்.


☞ 2008, 2011 ஆம் ஆண்டுகளில் மண்முனை – மேற்குப் பிரதேச செயலகம் நடத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றார்.

☞ **"வெரித்தாஸ் வானொலி"** நடத்திய கல்லறை வாசகப் போட்டியிலும் பரிசு பெற்றுள்ளார்.

இவ்வாறாகத் தனது 52 ஆவது வயதிலும் தனது தொழிலோடு இணைந்ததாக கலைப் பணியிலும் ஈடுபட்டு வருகிறார். தான் பத்திரிகைகளில் எழுதிய 300 க்கும் மேற்பட்ட கவிதைகளை நூலுருவாக்கம் செய்ய அரசியல் வாதிகள், பணவசதி படைத்தோரை அணுகியும் பயனேதும் கிட்டவில்லை எனக் கண்ணீர் ததும்பத் தெரிவித்தார். அத்தோடு கலைஞர்களை வாழும்போதே வாழ்த்த வேண்டுமெனவும் - 60 வயதுக் கட்டுப்பாடு 45 ஆகக் குறைக்கப்பட வேண்டுமெனவும் **"தென்றலுக்குத்"** தெரிவித்தார்.

எனவே இவரின் நூல் விரைவில் நூலுருவாக்கம் பெற இலக்கிய ஆர்வலர்களும், தனவந்தர்களும் உதவ முன்வர வேண்டுமெனத் **"தென்றல்"** இவ்வேளையில் வேண்டுகோள் விடுக்கிறது.

# தமிழ் இலக்கிய வரலாறும் தமிழில் எழுதப் பெற்றுள்ளனவற்றின் வரலாறும்



பேராசிரியர்
கா.சிவத்தம்பி

தமிழின் இலக்கிய வரலாறு பற்றிய எண்ணக்கரு இறையனார் களவியல் உரைகாலம் முதலே காணப்படுகின்றதெனினும், இன்றைய கருத்தில் தமிழ் இலக்கிய வரலாறு என்று கொள்ளப்படும் விடயம் பற்றிய நூல்கள் 20 ஆம் நூற்றாண்டிலே ஏறத்தாழ 1920- 1950 வரையான காலம் முதலே தொடங்குகிறது என்று கூறலாம்.

உண்மையில் இறையனார் களவியல் உரைக்கு முன்னரே தமிழில் எழுதப்பட்டுள்ளவற்றின் வரலாற்றை ஒன்று திரட்ட வேண்டுமெனும் கருத்து நிலவிற்று என்பதனை சங்க இலக்கியங்கள் பற்றித் தொகுத்தோன் - தொகுப்பித்தோன் பற்றிய விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தொகுத்தோன் - தொகுப்பித்தோன் என்று கூறும் பொழுது ஏற்கனவே உள்ள இலக்கியங்களிலிருந்து தொகுக்கப் பெற்றவை என்ற கருத்தே மேலோங்கி நிற்கிறது. அப்படியானால் தொகுக்கப் பெறுவதற்கு முன்னர் அந்தந்தப் பாடல்கள் எங்கே காணப்பெற்றன என்பதும் - எவ்வாறு கையளிக்கப்பெற்றன என்பதும் முக்கிய வினாக்களாக மேற்கிளம்புகின்றன. உண்மையில் இவ்வினாக்களுக்கான விடைகள் இன்றும் எம்மிடம் இல்லை.

சமண, பௌத்தச் செல்வாக்குக் காரணமாக அவர்கள் தங்கள் பாடசாலை

களிலே கற்பிப்பதற்கென எழுதியவற்றையே இன்று நாம் அறநூல்கள் என்று கூறுகிறோம். இந்த அறநூல்களின் வாசகர்கள் சமண, பௌத்தப் பாடசாலைகளில் படித்த மாணவர்களாகவே இருத்தல் வேண்டும். நாலடியார், திருக்குறள் ஆகிய நூல்கள் சமண புலவர்களால் எழுதப்பட்டவை என்பது இப்பொழுது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கருத்தாகும். இவ்வாறு மாணவ தேவைகளுக்கான நூல்களை எழுதியதன் காரணமாகவும் - அவ்வவ் காலங்களில் நிலவிய வாய்மொழி இலக்கியங்கள் பற்றிப் பேசப்படாது போய் விட்டது. சங்க இலக்கிய காலத்தை வீரயுகம் எனக் கொண்டால் உலகின் மற்றய வீரயுககாலக் காவியங்கள் போன்றவை தமிழில் இல்லை என்பது தெரியவரும். சுங்ககாலப் பாணர்கள் அரச புகழ்ச்சியைத் தவிர பாடிய மற்றய பாடல்கள் யாவை? என்ற தகவல் கூட இன்று நம்மிடையே இல்லை. சங்ககாலக் கூத்தர்கள் ஆடிய கூத்துக்களின் பாத்திரக் கூற்றுக்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

.பல்லவர், சோழர், இரண்டாம் பாண்டியப் பேரரசு காலங்களில் அதாவது ஏறத்தாழ கி.பி 560 - 590 முதல் கி.பி 1310 வரையுள்ள இலக்கியங்களை நோக்கும் போது அவை பெரும்பாலும் அரசவை சார்ந்த இலக்கியங்களாகவும் - சைவ வைணவ மதநிலைப் பாடல்களாகவும் காணப்படுகின்றன. இவை வழியாக வரும் பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய பேரிலக்கியங்களைத் தவிர மற்றய நூல்கள் பற்றிய தகவல் எதுவும் நம்மிடம் இல்லை. ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் எனக் கொள்ளப்படுபவை சமண, பௌத்த ஆக்கங்களாகும்.

சைவ, வைஷ்ணவ பாரம்பரியத்தில் வருபவையான பெரியபுராணத்தையும், கம்பராமாயணத்தையும் காப்பியங்கள் பற்றிய வாய்ப்பாடுகளிலே சேர்த்துக் கொள்வதில்லை என்பது முக்கியமான உண்மையாகும்.

ஏறத்தாழ கி.பி 7ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியதெனக் கொள்ளப்படத்தக்கதாக திருமந்திரம் சைவ எழுச்சிக்கு பின்புலமாக அமைந்த கருத்து நிலைப் பாடல்களாகவே கொள்ளப்பட வேண்டும். பெரியவாச்சான்பிள்ளை பற்றிச் சாதாரண தமிழ் இலக்கிய வரலாற்று மாணவன் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பில்லை.

தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவிய சைவ மேலாண்மையே சைவசித்தாந்த சாத்திரங்களை இலக்கியமாகப் பேணுவதற்கான காரணமாக அமைந்தது. ஆனால் ஏறத்தாழ கி.பி 14 - 15ஆம் நூற்றாண்டுகளிலிருந்து அடிநிலை மக்களின் வாழ்க்கையினூடாகக் கிளம்பிய பாடல் முறைகள் இலக்கியங்களாக அமைவதைக் காணலாம்.

**"குறம்"** என்பவை குறவர்களுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்டவை. **"பள்ளு"** என்பவை வயல் வேலைகளில் ஈடுபட்டிருந்த பள்ளரை மையமாகக் கொண்டவையாகும். நிலச் சுகாந்தாரை ஆண்டான் என்று கூறுவதிலுள்ள சமூக உளக்கருத்தை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

19 ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலக்கல்வி வழியாக வந்த பல்வேறு கல்விநிலை வளர்ச்சிகளை தமிழ்படுத்திக் கொள்வதற்கென கலைச்சொற்கள் எனும் Glossary terms தொகுதிகளை ஆக்கிக் கொண்டோம். மேலும் பிரித்தானிய ஆட்சிக் காலத்திலே (1761 -1802) பெருவளர்ச்சி கண்ட அச்சுப்பதிப்பு காரணமாக புதுவகை நூல்கள் தோன்றின. பாலியர் நேசன், தினவர்த்தமானி எனச் சஞ்சிகைகள் தோன்றின. ஏறத்தாழ 1950 முதல் குறிப்பாக இலங்கையில் மருத்துவம், பொறியியல் போன்ற பாடங்களைத் தமிழிலே கற்பிக்கத் தொடங்கிய பொழுது அவற்றுக்கான கலைச்சொற் தொகுதிகளும், மொழிபெயர்ப்பு நூல்களும் தனி நூல்களும் தோன்றின.

இவற்றைப் பற்றியும் தமிழ் இலக்கிய வரலாறு பேசுவதில்லை. இதற்கு அடிப்படையான காரணம் இல்லாமலும் இல்லை. ஆங்கில நிலை நின்று கூறுவதானால் இவற்றை "Writings" எனக் கொள்ளலாமே தவிர "Literature" எனக் கொள்ள முடியாது. ஆனால் இப்போது இலக்கியம் சம்பந்தம் அல்லாத விடயங்கள் பற்றி எழுதப்படுமெனவற்றையும் "Literature" என்று சொல்லும் முறைமை உள்ளது. உதாரணம்:- "What is the literature you have on drugs". இப்படிப் பார்க்கும் போதுதான் தமிழில் எழுதப்பட்டன யாவற்றையும் பற்றிய வரலாறு இல்லாமல் இலக்கியங்களின் வரலாறே உள்ளது. ஆனால் சமஸ்கிரத வரலாற்று நூல்களில் நீதி சாஸ்திரங்கள் பற்றியும், சோதிடம் - வைத்திய நூல்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.


இவ்வாறு நோக்கும்போது தமிழில் எழுதப்பெற்றுள்ள யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்று நூல் தேவைப்படுகிறது. இது தொடர்பாகப் பல்கலைக் கழகங்களும், ஊடகவியலாளர்களும் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது.

**"தென்றலின்"**

**தொடர் வருகைக்காக உங்களால் இயன்ற பங்களிப்பை நல்குங்கள்.**

(ஆ–ர்)

# பிள்ளையின் குரலில்



ஆண்டைந்து தாண்டிய ருங் கல்வி கற்றிட
ஆசையோடு பள்ளி வந்தோமையா
மாண்டறிவு பெறு மதிநுட்பமானோரே
மனமோ டெம் குரல் கேளுமையா?

வகுப்பறைச் சிறைக்குள் வைத்திருந்து எம்மை
வாட்டி வதைத்திட வேண்டாமையா
வகுத்த கல்விதனை வயதும் வளர்ச்சியும்
வாகாயறிந்து முறை ஊட்டிடுவீர்!

விடுதலைச் சிறகு விரித்து விளையாடியே
விருப்பாய் வீட்டிலிருந்தோமையா
கெடுதலிலா மலெம் பயம் கெடுத்திடுவீரெம்
கஷ்டமென்ன வென்று கேட்டிடுவீர்!

அன்னையாய் எம்மை அணைத்திடுவீர் - நல்
ஆன்றோர் அறிவுரை சொல்லிடுவீர்!
மன்னு கலங்கரை விளக்கமாய் எமக்கு
மண்ணில் மாதிரியாய் மன்னிடுவீர்!

ஓடி விளையாட விருப்பமையா நாளும்
ஒற்றுமையாய் உண்ண விருப்பமையா
ஆடிப்பாட யெமக்காசை யையா அதில்
ஆற்று கல்வி யூடே ஊட்டிடுவீர்..

ஒழுக்கமாக வாழ வேண்டுமையா நாளும்
ஓங்கு வழிமுறை யறிவோமையா
பழக்கமுடன் பண்பும் வேண்டுமையா - எனப்
படைத்த சாமி வழி நடப்போமையா.

அறிவைத் தேடுமாற்றல் வளருமையா எம்மில்
ஆழக் கற்குமாவல் தூண்டுமையா
நெறிமுறையாயுயிர் லெட்சியம் பேணியே
நீள் வழிக் காற்றுப் படுத்துமையா!!!

-திருமதி
**வேதநாயகி குணநாயகம்**
**களுதாவளை-**

பழவூரான்

# நீத்தார் நினைவு

## சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்களின் இழப்பு சோதிடத் துறைக்குப் பேரிழப்பு!!!



இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள திருவிதாங்கூர் என்ற ஊரில் சிதம்பரஜயருக்கும் – ஜானகி அம்மாளுக்கும் மகனாக 18.12.1935 இல் பிறந்தார். இவர் சிறு வயதிலேயே திருக்கணிதப் பஞ்சாங்கக் கணிதர் சி.சுப்பிரமணியக் குருக்களால் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என மூன்று மொழிகளில் ஆளுமை கொண்டவராதலால் பல நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ளார். இதற்கு வசதியாக திருக்கணிதப் பதிப்பகத்தையும் நிறுவினார். ஸ்நபன மஞ்சரிஎன்ற சமஸ்கிருத நூல், சோதிடம் கற்போம், திருமணப் பொருத்தம் ஆகிய நூல்களையும் சோதிடமலர் என்ற மாத இதழையும் வெளியிட்டுள்ளார்.

குருக்களின் ஆளுமைத் திறத்தைக் கண்டு நயத்தவர்கள் அவருக்கு மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலால் வழங்கப்பட்ட **"சோதிட பூஷணம் விருது"**, சரசாலை வழங்கப்பட்ட **"சிவாச்சார்ய திலகம்"**, வட்டக்கச்சி முருகன் கோவிலால் வழங்கப்பட்ட **"சிவாகம பூஷணம்"**, லண்டன் சைவக் கோவில் ஒன்றியத்தால் வழங்கப்பட்ட **"வேதாகம வித்தர்"**, கலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட **"கலாபூஷணம் விருது"** ஆகியன குறிப்பிடத்தக்கன. இவ்வாறு திருக்கணிதப் பஞ்சாங்கத்தோடு – ஆன்மீகத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட கலாபூஷணம் சிதம்பரநாதக் குருக்களுக்குத் **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# நினைவுறு நிகழ்வுகள்...

-ஏறாவூர் தாஹிர்-

கட்டிலில் உருண்டமை நினைவில்லை!
கை, கால் அசைத்தமை நினைவில்லை!
தொட்டிலிற் புரண்டமை நினைவில்லை!
தொல்லைகள் கொடுத்தமை நினைவில்லை!
தாய்மடி கிடந்தது நினைவில்லை!
தாயமுதுண்டதும் நினைவில்லை!
குப்புறச் சரிந்தது நினைவில்லை!
குதிகாலடித்ததும் நினைவில்லை!
தரையில் தவழ்ந்தது நினைவில்லை!
தவழ்ந்தபின் எழுந்ததும் நினைவில்லை!
தத்தி நடந்தது நினைவில்லை!
தடுக்கி விழுந்ததும் நினைவில்லை!
புத்தகம் சுமந்தது நினைவில்லை!
வித்தகம் சென்றதும் நினைவில்லை!

வாலிபப் பருவ நிகழ்வுகளும்
வளரும் வயதினில் பதிவுகளும்
வேலியில் மேவிடும் படர்கொடி போல்
வேர் முதல் நுனிவரை நினைவுகளாய்!
முதுமையோர் முகவரி எழுதிய பின்
முன்போல் எதுவுமே நினைவில்லை!
தத்தி நடத்தலும் தடியூன்றி
தடுக்கி விழுதலும், எழுதலுமாய்
குளவி, குளந்தையாய் சிறு வயதில்
குடிகொண்டிருந்தவை மீண்டனவோ?



சிந்தனைப் பட்சிகள் சிறகடித்துப்
பறக்க மறுப்பதும் அதன் விளைவோ?
மழலைபோல் வார்த்தைகள் மொழிதலுடன்
மற்றவர் முன்வாய் வழிதலுமாய்...
மறதியும் மந்தமும் மலிதலுடன்
மருத்துவம் தோற்றுடல் நலிதலுமாய்....
அரைகுறை உணர்வுடன் அரைநழுவும்
ஆடையும், பீடையும் மிகுதலுமாய்....
மருந்து மாத்திரை விழுங்குதலில்
மறுத்தலும், ஒறுத்தலும், பொறுத்தலுமாய்...
கொடுத்தலைப் போல் உயிர் எடுத்தலுக்கும்
கொடுத்தவன் தொடுத்திடும் ஏற்பாடோ?
தடுத்தவன், தடுப்பவன் யார் உலகில்?
தடுப்பவனும் இதே நிலை முடிவில்!

சிறுகதை

# கலப்படம்

களுவாஞ்சியூர்
அனோஜா பவளேந்திரன்

அன்று எனக்கு வயது ஐந்து இருக்கும். அப்போது தான் தமிழ் அரிச்சுவடியைப் படித்துக் கொண்டிருந்தேன். புதிதாக எழுத்துக்களை அறிந்து கொண்ட திருப்தியில் எழுத்துக்களைக் காணுமிடமெல்லாம் உச்சரிப்பேன். ஒரு நாள் ஐந்து ரூபாய்க் குற்றியைப் பெற்றுக் கொண்டு மிட்டாய் வாங்குவதற்கு நாராயணனின் கடைக்கு ஓடினேன். **"இன்று கடன் இல்லை"** என்ற அவனது கடையின் மகுட வாசகத்தை வாசித்து உக்சரித்தேனே ஒழிய அதன் அர்த்தத்தை என்னால் உணர்ந்து கொள்ள முடிய்வில்லை. மறுநாளும் அதே வாசகம் அதே வோட்டில். அதற்கடுத்த நாளும்... அடுத்து அடுத்து ஒவ்வொரு நாளும் அதே வாசகம்.

நாராயணனின் கடை பிரபல்யமானது. நானும் தினமும் மிட்டாய் வாங்கக் கடைக்குப் போவேன். அன்றொரு நாள் மிட்டாய் வாங்கும் போது அவனது மகள் அம்முக்குட்டியும் மிட்டாய் கேட்டுக் கத்தினாள். அவளுக்கு என்னைவிட ஓரிரு வயதுகள் தான் குறைவாக இருக்கும். அவளுக்குக் கீழிருந்து மிட்டாய் எடுத்துக் கொடுத்தான். இதைப் பார்த்த நான் மிகச் சுவை நிறைந்த இனிப்பு மிட்டாய் கீழிருப்பதாக எண்ணிக் கொண்டேன். மறுநாள் அவரிடம் மிட்டாய் வாங்கும்போது



**"நேற்று அம்முக்குட்டிக்குக் கொடுத்த கீழிருக்கும் இனிப்பு மிட்டாய் தாங்க" என்றேன். "அதோ பாரு அழகான நீலக்குருவி"** என்று எனது கவனத்தைக் கலைத்து விட்டு- பெட்டியிலிருந்து மிட்டாயை எடுத்துக் கீழிருந்து தருவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு தந்தான். அன்றிலிருந்து நாராயணனின் கடை பற்றி என் பிஞ்சு நெஞ்சில் நஞ்சே விதைக்கப்பட்டது.

காலப்போக்கில் பிச்சமூர்த்தியின் **"பெட்டிக்கடை நாரணன்"** என்ற கவிதை படிக்கக் கிடைத்தது. அதைப் படிக்கும்போது நாரணனுக்கு நான் வரைந்த கற்பனை உருவம் நாராயணன்தான். கவிதையைப் படிக்கும்போது பிச்சமூர்த்தியும் நாராயணன் வாடிக்கையாளரோ? என்றும் எண்ணிக் கொண்டேன். கலப்படம் இல்லாத பண்டத்தை அவனது கடையில் கண்ணால் கூடக் காணமுடியாது. காலங்கள் சில நகர்ந்த போதுதான் அவனது கடையின் மகுட வாசகத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இன்று நான் வளர்ந்து விட்டேன். ஆனாலும் அவனது கடையின் மகுடவாசக போர்ட் மட்டும் மாற்றப்படவில்லை.

நாளை காலை வேலைக்குச் செல்லும் என் கணவனுக்கு உணவு தயாரிக்க மிளகு இல்லாததைத் தெரிந்து கொண்டு நாராயணனின் கடைக்குச் சென்றேன். அன்று அவனுக்கும் - அவனது மகள் அம்முவுக்கும் பெரும் வாய்த்தர்க்கம் நடந்து கொண்டிருந்தது. நாராயணன் அம்முவின் காதலுக்கு எதிர்ப்பைக் கொட்டிக் கொண்டிருந்தான். அம்மு தாழ்ந்த சாதிப் பையன் ஒருவனை காதலிப்பதாக நானும் அறிந்திருந்தேன். அதனால் அந்தச் சண்டைக்கான காரணத்தை என்னால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

**"அம்மு நம்ம ஜாதி என்ன? அவன் ஜாதி என்ன? நம்ம கால் தூசி தட்டக் கூடத் தகுதியில்லாதவனை நம்ம ஜாதிக்க கலக்கப் போறீயா?"**

**"அப்பா இன்னொரு முறை அப்பிடிச் சொல்லாதீங்க. மிளகுக்க பப்பாசிப் பருப்பக் கலக்கிற நீங்களா பேசுறீங்க...? நானும் மனுஷன்தான். எங்களுக்க எந்த வித்தியாசமும் கிடையாது. எங்களப் பிரிக்க யாராலையும் முடியாது. போ நீ அவன்கூட. போனா என் சொத்தில ஒரு மயிர்கூட உனக்குத் தரமாட்டேன்"**

**"வேணாம் அப்பா நீங்க கொடுத்தாலும் நான் அத எடுத்துக்க மாட்டேன். என் பிள்ளையோட இரத்தமெண்டாலும் நேர்மையான உழைப்பில ஊறணுமெண்டு ஆசப்படுறன். என் சசி எனக்காகக் காத்திட்டு இருக்கான். நான் அவன் கூடவே போறன்"** என்று சொல்லிக் கொண்டு வாயிலில் காத்திருந்த சசியுடன் அம்மு போகிறாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த நான் எப்படி நாராயணனின் கடையில் மிளகு வாங்க முடியும்? வீட்டுக்குத் திரும்பும் வழியில்தான் எனக்குப் பதினைந்து

வயது இருக்கும்போது பக்கத்து வீட்டுச் சுதா அண்ணனுக்கு நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. ஒருநாள் இரவு அவருக்கு விஷம் பட்டதாச் சொல்லிக் கத்தினாங்க. அவர் மூன்று மிளகென்ன முப்பது மிளகு சப்பியிருப்பாரு. அவருக்கு உறைக்கவே இல்லை. அப்போ விஷம் ஏறிற்றெண்டு பரிசாரிட்டக் கொண்டு போனாங்க. அவர் சுதாண்ணனுக்கு விஷம் ஏறல்ல எண்டாரு. பிறகு நம்பிக்கையில்லாம ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விளட்ட செக் பண்ணினாங்க. அந்த றிப்போட்டும் விஷம் இல்லை எண்டு சொன்ன பிறகுதான் நம்பிக்கையோட இருந்தவங்க. இப்பத்தான் புரியுது சுதாண்ணன் சாப்பிட்டது நாராயணன் கடை மிளகெண்டு. நினைக்க நினைக்க என்னால சிரிப்பை அடக்க முடியல்ல.

(யாவும் கற்பனை)

## வியக்கிறேன்

-முகில்வண்ணன்,
பாண்டிருப்பு -



பூவாசல் திறந்த தென்று
சொன்னார்கள் நம்பவில்லை
போன மாசம் பார்த்த
பெண் தானா
நீ இன்று.......?


பொங்கிப் பூரித்த
இளமை எல்லாம்
எங்கிருந்து உனக்கு
இவ்வண்ணம் கிடைத்ததடி?
என் மடியில் ஏறிக்குதித்த
சின்னப் பெண் தானா நீ ?
எண்ணிப் பார்க்க முடியவில்லை!


பூவிழி திறந்து நீ
பார்க்கும் போது
பொய்யில்லை என்று
புரிகிறது கொஞ்சம்!
என்றாலும்: மாதம் ஒன்றில்
மாயம் என்ன செய்தாயோ?
மாயன் என்ன செய்தானோ?

இத்தனையும் கொண்டு
என்னைக் கிறங்க வைக்கும்
வித்தை எங்கு கற்றாய் ?
வியக்கிறேன் நானின்று !

# படமும் - பதிவும்

- ரவிப்ரியா -







2015 இல் தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகத் **"தென்றல்"** நடத்தியமுன்னோடிப் பரீட்சை -03 ற்கானபதக்கம் அணிவிக்கும் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 25.04.2015 அன்று **"தென்றல்"** சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையில் மட்/ம.மே/கொக்கட்டிச்சோலை இ.கி.மி வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்குமாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரம் பரீட்சையில் இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே பெற்ற மட்/ம.மே/ அம்பிளாந்துறை கலை மகள் மகாவித்தியாலய மாணவி வே.திவேனிக்கா (வெள்ளிப்பதக்கம்), மட்/ம.மே/கொக்கட்டிச்சோலை இ.கி.மி வித்தியாலய மாணவி ச.டிதுர்ஷிகா (வெண்கலப்பதக்கம்) அணிவித்துச் சான்றிழ் வழங்கிக் கௌரவிப்பதையும், மட்/ம.மே/கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித்தியாலய ஆசிரியை திருமதி விஜயலெட்சுமி உதயகுமார் பரீட்சையில் சித்திபெற்ற மாணவியொருவருக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌவிப்பதையும் படங்களில் காணலாம்.



மட்டக்களப்புமாவட்டப் பாராளுமன்றஉறுப்பினர் பா.அரியநேத்திரனின் ஒதுக்கீட்டில் துறைநீலாவணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கிழக்கிலங்கையின் சிற்றரசியாக இருந்த சீர்பாததேவியின் திருவுருவச்சிலையை 25.05.2015 அன்று பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.




எவரெஸ்ட் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிமட்டக்களப்பு இந்துக்கல்லூரிக்கும் - பெரியகல்லாறு மத்திய கல்லூரிக்குமிடையே பெரியகல்லாற்றில் 30/05/2015 அன்று இடம்பெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டியமட்டக்களப்பு இந்துக்கல்லூரிக்குவெற்றிக் கிண்ணத்தை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், கிழக்குமாகாணசபை உறுப்பினர் மா.நடராசாமற்றும் பட்டிருப்புவலயபிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ஞானராஜா ஆகியோர் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.









ஐந்தாவது கண்ணகிகலை, கலை இலக்கியவிழா 13/06/2015 மற்றும் 14/06/2015 ஆகிய தினங்களில் வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வை ஒட்டி இடம்பெற்ற பண்பாட்டுப் பேரணிகளையும், வரவேற்பு நடனத்தையும், விழாக்குழுத் தலைவர் கி.துரைராஜசிங்கம் மற்றும் கூடல் தலைவர் த.கோபாலகிருஷ்ணன்ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.



ஜக்கியநாடுகள் திட்டச் செயலகத்தின் அனுசரணையுடன் உலகசுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏறாவூர் நகரசபையால் வாவிக்கரை துப்பரவு செய்யப்பட்டு மரக்கன்றுகள் 01/06/2015 அன்றுநடப்பட்டன. இந்நிகழ்வில் நகரசபைச் செயலாளர் எம்.எம்.எம்.ஹமீம் மற்றும் ஊழியர்கள் மரக்கன்றைநடுவதைப் படத்தில் காணலாம்.



கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு புன்னைச்சோலை ஸ்ரீ பத்திர காளியம்பாள் ஆலய உற்சவத்தின் இறுதி நாளான 12/06/2015 அன்று மாலை தீமிதிப்பு இடம்பெற்றது. இந்நிகழ்வில் அடியார்கள், தேவாதிகள் தீமிதிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஈனரை எட்டி உதை பெண்ணே!!!



இன்னும் பெண்களை மிதிக்க நினைக்கும்
ஈனரை எட்டி உதை!
அன்பை மறந்துனை அடிமையென் றெண்ணிடும்
அதர்மனை வாட்டி வதை!

இருள்மண்டிய உலகில் இருந்தனர் மூடர்
இன்னமுந் தொடர் வதையா!
அருள்பொங்கிடுந் தாய்மையின் அன்பினை மறந்தோன்
அலகையின் கொடு வதையா?

பூட்டிய சிறையாய் வீட்டினுள் பெண்ணைப்
போட்டிடில் பூட்டை உடை!
நாட்டினை ஆளும் நங்கையர் உலகில்
நலம் பெற என்ன தடை?

தட்டில் உணவும் கட்டில் சுகமும்
தந்திடும் எந்திரமா?
பொட்டும் பூவும் பொற்சரத் தாலியும்
பூட்டுதல் தந்திரமா?

ஆண்மையு மன்பும் அறிவையுங் கொண்ட
ஆண்மகன் தக்க துணை!
வீண்தன வக்கிரம் வெகுளி கொள் பேடிகள்
வேண்டாம் விரட்டவனை!

பூமியிற் பாதி பூவையர்க் குரித் தெனப்
புரிந்தவன் தனைத் தேடு!
ஆமிதை மறுக்கின் ஆண்டவன் எனினும்
ஆதர்மம் அதைச் சாடு!!!

-கவிஞர்
நிலா தமிழின்தாசன்-



## நகைச் சுவைத் "தென்றல்"

ஆசிரியர் :- "**ஆன்**" என்ற விகுதி வரும் சொற்கள் "**ஆண்பால்**" எனக் கொள்ளப்படும்.

மாணவன் :- "**இலையான்**" எனச் சொல்லப்படும் போது "**ஆன்**" இலையானா?

**2016** இல் தரம் -5 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபரில் உங்கள் "**தென்றல்**" ஆரம்பிக்கவுள்ளது. எனவே இம் முயற்சியுடன் உங்கள் பாடசாலையையும் இணைத்துக் கொள்ளுங்கள். அனுப்பி வைப்பவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 300/= ரூபா காசுக் கட்டளையையும் கட்டணமாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

**"தென்றல்"**
44/1 பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு

-(ஆ-ர்)

## முகப்பில்...

**உ**ங்கள் அபிமானத் "**தென்றல்**" தரம் -5 புலமைத் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக நடத்திய புலமைத்தேர்வு முன்னோடிப் பரீட்சை -03 இல் முதலாம் இடத்தைப் பெற்ற மட்/ம. மே/அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய மாணவி வி. ஓவியாவுக்கான (165) தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழினை கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரம் வழங்குவதைக் காணலாம்.




- Dr.K.அருளானந்தம் (MBBS, D,F,M)
விரிவுரையாளர், சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

## 30-40 வயதுகளில்...

இப்பருவம் ஒப்பீட்டு ரீதியில் வாழ்க்கையின் மிக முக்கிய பருவமாகும். ஏனெனில் குழந்தைகளைப் பெற்றெடுப்பதிலும், அவர்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் அதீத அக்கறையுடன் தங்களது உடலையும், உள்ளத்தையும் அர்ப்பணிக்கின்ற இளம் பெற்றோரின் பொறுப்புமிக்க காலமாகும். இக்காலகட்டத்தில் குழந்தைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிப்பதற்கும் - சிலவேளைகளில் அதிகூடிய இடைவெளிகளில் குழந்தைகள் பெறுவதற்கும் வாய்ப்பேற்படும். காரணம் பொதுவாக ஆண்கள் தொழில் விருத்தியின் பொருட்டு- பொருளாதார மேம்பாட்டுக்காகத் தங்கள் வீட்டுச் சூழலிலிருந்தும் - நெருங்கிய உறவுகளை விட்டும் விலகியிருக்க முடியும்.

இக்காலகட்டத்தில் உடல் ரீதியான எந்தச் செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெறும். குறிப்பாக குடும்ப வாழ்வில் பாலியல் செயற்பாடுகளுக்கு மிகவும் சிறந்த காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் ஆண்களினதும்,பெண்களினதும் பாலியல் ஓமோன்கள் சீராகக் காணப்படுவதனால் குழந்தை பெறுவதில் குறிப்பிடக் கூடியளவு பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. மாறாக குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அல்லது குறைந்தவர்கள் இக்காலத்தைத் தெளிவாகப் பயன்படுத்த

வேண்டும். காரணம் கர்ப்பம் தரிப்பதற்கும்,மகப்பேற்றுக்கும் மருத்துவ ரீதியாக பெரிய இடர்பாடுகளைத் தோற்றுவிக்காது. மாறாக இதே செயற்பாடுகளை ஏனைய காலப்பகுதியில் (40வயதுக்கு மேல்) மேற்கொள்ளுமிடத்து மிகப்பெரிய சவாலாக இவ்விடயம் அமையலாம்.

நோய்களைப் பொறுத்தவரையில் பொதுவாகத் தொற்றும், தொற்றா நோய்கள் மிகக் குறைந்தளவிலேயே ஏற்பட வாய்ப்புண்டு. எனினும் தொற்றா நோய்களுக்குரிய அபாயக் காரணிகளான உடற்பருமன், உடற்பயிற்சியின்மை, சமூகப் பழக்க வழக்கம் (புகைத்தல், மதுபானம்), மாறுபட்ட உணவுப் பழக்கங்கள் என்பவற்றை இக்கால கட்டம் தன்னகத்தே கொண்டிருக்கும். ஆனால் வெளித்தோற்றத்தில் இதற்கான குணங்குறிகளை காணமுடியாது.

இக்காலகட்டத்தில் உடல் இடையைச் சமமாகப் பேணுவதும், சீரான உடற்பயிற்சியை மேற்கொள்வதும், சுகாதாரமற்ற பழக்க வழக்கங்களைத் தவிர்ப்பதுமான செயற்பாடுகளின் ஊடாக பிற்காலத்தில் தொற்றா நோய்கள் எம்மைத் தாக்குவதிலிருந்து ஓரளவு குறைத்துக் கொள்ளலாம்.

இப்பருவத்தில் பொதுவாக வீதி விபத்துக்கள், சமூகப் பாலியல் விலகல்கள் ஏற்படாமல் பாதுகாத்தல் நல்லது. இப்பருவத்தில் அனேகமானோர் குறிப்பிட்டளவு சமூக மட்டங்களை அடைந்து கொண்டிருப்பார்கள்.

இக்காலப் பகுதியில் சமூக விழுமியங்களை அதிகளவு ஏற்றுக் கொள்வதும், சமய - சமூக -கலாசார நிகழ்ச்சிகளில் தங்களையும் - தங்களது குடும்பத்தாரையும் இணைத்துக் கொள்வதுடன் அதிகளவு பங்குபற்றுதலையும் வெளிக்காட்டுவர். குழந்தைகளின் பிறந்தநாள் நிகழ்ச்சிகளையும்,தங்களது திருமண ஆண்டு விழாவையும் கொண்டாடுவர். மேலும் உல்லாசப் பிரயாணங்களைத் திட்டமிடுவதிலும், அவற்றைச் சேர்ந்து கொண்டாடுவதிலும் அதிக ஈடுபாட்டுடன் செயற்படுவர்.

இக்காலகட்டத்தில் தொழில் ரீதியான பங்காளிகளின் உறவுகள் அதிகரித்துக் காணப்படும். பிற நாடுகளுக்கான பிரயாணங்களையும், பிற பிரதேசங்களுக்கான பிரயாணங்களையும் தொழிற்பாட்டு ரீதியிலும், தனிப்பட்ட வகையிலும் மேற்கொள்ளத் தயங்க மாட்டார்கள். அத்தோடு ஆலயப் பணிகளிலும், பாடசாலை அபிவிருத்தி வேலைகளிலும் தங்களது பங்களிப்பினை நல்குவதன் மூலம் சமூகத்தில் தங்களது வகிபாகத்தைத் தக்க வைத்துக் கொள்வார்கள்.

(தொடரும்...)

# தலைவாழை விருந்து



வீடுகளில் தற்போது வாழையிலையில் சாப்பிடும் பழக்கம் அறவே இல்லாது போய்விட்டது. ஹோட்டல்களில் கல்யாண விருந்துகளைத் தவிர, மற்ற நேரங்களில் வாழை இலைகளில் உணவருந்துவதில்லை என்ற நிலை வந்து விட்டது. தொடர்மாடி வீடுகளில் வாழை இலை கிடைப்பது கஸ்டம். நாகரீகம், சூழ்நிலை, நேரமின்மை போன்ற காரணங் களால் இன்று வாழையிலைச் சாப்பாடு என்றால் அது விஷே டமானதாகக் கருதப்படுகிறது. ஆனால் வாழையிலையில் சூடான உணவு வகைகளை வைத்துச் சாப்பிட்டுப் பழகிய வர்கள், தட்டில் சாப்பிட்டால் மனத் திருப்தி அடைய மாட்டார்கள்.

வாழையிலையில் சாப்பிடும் ஒருவருக்கு இடது கைப்பக்கம் இருப்பதாகப் போட வேண்டும் என்பது மரபு. ஏனெனில் சாப்பிடு வதற்கு அகலமான பகுதி வலது கையருகில் அப்போது அமையும் என்பதற்காகத்தான்.

பருப்பு, நெய், சாதம், சாம்பார், பதார்த்தங்கள் என எல்லாம் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும். இதில் பொரியல், கூட்டு, பச்சடி, ஊற வைத்த பருப்பு... இப்படி எல்லாவிதமான உணவும் இருக்கும்.

அப்பளம், வடை, ஊறுகாய், உப்பு இவை சாப்பிடுபவரின் இடது கை மேல் ஓரத்தில் வைப்பார்கள். ஏன்? இந்த வகைப் பதார்த்தங்கள் குறைவாகச் சுவைக்கு மட்டுமே என்பதை உணர்ந்து சாப்பிடத்தான். எனவே இச்சுவையை உரியவாறு உணர்ந்து சாப்பிட வாழையிலையைப் பயன்படுத்துவோம்.

# புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகத்

# "தென்றல்" தொகுத்து வழங்கும் முக்கிய குறிப்புக்கள்



## விடுகதைகள்

- அரிசி போலப் பூப்பூக்கும். அம்மாடி என்று காய் காய்க்கும். அது என்ன?
- அள்ள அள்ளப் பெரிதாகும் அது என்ன?
- அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?
- வட்டமாய் இருக்கும் ஆழமாய் இருக்கும் எட்டிப் பார்த்தால் உருவம் தெரியும். அது என்ன?
- உடலை உருக்கி வேலை செய்வாள். வெளிச்சத்தையும் கொடுப்பாள். அவள் யார்?
- உருவத்தைக் காட்டும் கண்ணாடி அல்ல. செய்வதைச் செய்யும் குரங்கும் அல்ல. அது என்ன?
- கொண்டை அணிந்த ஆண் பிள்ளை. கூவி அழைத்தால் ஊரே விழித்து எழும். அது என்ன?
- கடித்தால் கடிபட மாட்டான் பிடித்தால் பிடிபட மாட்டான். அவன் யார்?
- வாலுள்ளவன் வானத்தில் பறக்கிறான். அவன் யார்?
- வெள்ளக் கத்தரிக்காய் கள்ளக் கூச்சல் போடுது அது என்ன?
- உணவை எடுத்திடுவான் உண்மையில் வைத்திடுவான். அவன் யார்?
- ஏறி அமர்ந்தாலும், ஓங்கி மிதித்தாலும் முகம் சுழிக்க மாட்டான். அவன், யார்?
- மழை பெய்த பின் குடை பிடிப்பான் அவன் யார்?
- செய்யாத குளத்தில் சுவையான நீர் இருக்கிறது. அது என்ன?
- சீருடை இல்லாத காவலாளி சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
- நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப் பிடிக்க ஆளில்லை. அவன் யார்?
- திறந்தால் முத்துக்கள் மூடினால் பவளங்கள். அவைகள் யாவை?
- தன்னிடம் சேருபவனை தன்னைப் போல் மாற்றுவான். அவன் யார்?
- தீக்குளித்துச் சாகிறவன் காற்று குளித்துச் சாவான். அவன் யார்?
- சுண்டிவிட்டால் இரத்தம் வராது. ஆனால் வெற்றி –தோல்வி வரும். அது எது?

- சின்ன வாயில் ஊட்டி விடும் உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருப்பான். அவன் யார்?
- முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தைப் பளிச்சென்று காட்டுவான். அவன் யார்?
- வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஒடிந்து போக மாட்டான். அவன் யார்?
- அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமியாகும். அது என்ன?
- மின்சாரம் இல்லாத வேளையிலும் எரிவான். அவன் யார்?
- இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக் கொள்ள வேண்டும். அவன் யார்?
- கண்ணுக்கு எட்டியவரை சொட்டு நீலமாய்த் தெரிவான். கையிலெடுத்தால் நிறமில்லாது போவான். அவன் யார்?
- வளமாய் வளர்ந்த மரம் வாசற்காலுக்கு உதவாத மரம். அது என்ன?

**விடைகள்**


| | | |
|---|---|---|
| மிளகாய் | அகப்பை | நாணயம் |
| பள்ளம் | ஈருருளி | உண்டியல் |
| வளையல் | காளான் | கண்ணாடி |
| கிணறு | இளநீர் | நாணல் |
| நிழல் | நாய் | தலைமுடி |
| சேவல் | ஆறு | சூரியன் |
| தண்ணீர் | பற்கள், உதடுகள் | ஏணி |
| பட்டம் | பால் | கடல் |
| சங்கு | கற்பூரம் | வாழைமரம் |

## அஞ்சலி!!!



திருப்பழுகாமத்தைச் சேர்ந்த இலண்டன் பழந்தமிழ்க் கலை இணையத்தின் ஸ்தாபகரும், கிராமியக் கலைஞரும், கவிஞருமான ஞானமுத்து சுப்பிரமணியத்துக்குத் (ஞானமணியம்) "தென்றல்" தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.








**நூல் : கலசம் -2014**

**வெளியீடு : தரம் -11 மாணவர்கள்**
**கமு/தி .கோ/தம்பிலுவில்**
**மத்திய மகா வித்தியாலயம்.**

இந் நூல் மேற்படி பாடசாலை தரம் -11 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆக்கங்களைத் தாங்கி முழுப்பிரசவமாக வெளிவந்துள்ளது. இவற்றில் நாடறிந்த எழுத்தாளரும், கவிஞரும், ஆசிரியருமான திருமதி ஜெகதீஸ்வரி நாதன் எழுதிய வில்லியம்பிள்ளைப் புலவர் தொடர்பான கட்டுரை மூலம் அவர் தொடர்பான பல்வேறு விடயங்களை அறிய முடிகிறது.

---




**நூல் : விடை தேடி (கவிதை நூல்)**

**ஆசிரியர் :- தம்பிலுவில் ஜெகா**

**வெளியீடு :- "பொதிகை", தம்பிலுவில்-02.**

**விலை :- ரூபா.240**

இந்நூலில் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் சிறுவர் துஷ்பிரயோகம், மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களின் தொழிற் பிரச்சினை, காணாமற் போனோர் ... போன்ற தலைப்புக்களில் கவிதைகள் அரங்கேறியுள்ளன. இவரது கவிதாற்றலினால் 14.03.1993 இல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் **"கவிக்கோகிலம்"** விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரது கவிதாற்றல் மேலும் எமது சமூகத்திற்குக் கிடைக்கட்டும்... எனத் "தென்றல்" மனதார வாழ்த்துகிறது.

# இலக்கிய நயம்

-கலாபூஷணம் முருகேசி தம்பிப்பிள்ளை-



# கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தேவி கண்ணகியின் முற்பிறப்பு

கண்ணகி பாரத தேசத்தில் கலிங்க நாட்டில் சிங்கபுர அரசனின் காவலனாக இருந்த பரதனின் மனைவியாக முற்பிறப்பில் இருந்தாள். இப்பரதன் கபிலபுரத்தைச் சேர்ந்த சங்கமன் என்பவனைத் தன் முற்பகைமையினால் அரசனிடம் ஒற்றன் காட்டிக் கொடுத்துக் கொலை செய்வித்தான்.

சங்கமன் மனைவி நீலி தன் கணவனை இழந்து தன் துயர் ஆற்றாமையினால் மலையுச்சியை அடைந்து எனக்கு ஏற்பட்ட இக் கொடுந்துயர் போல என் கணவனை மன்னனுக்குக் காட்டிக் கொடுத்துக் கொலை செய்வித்தவர்க்கும், கொலை ஏற்பட வேண்டுமென்று சாபமிட்டு மலையுச்சியிலிருந்து வீழ்ந்து மாண்டான். நீலியின் சாபப்படியே இப்பிறப்பில் கண்ணகி தன் கணவனை இழந்து தவிக்கிறாள்.

மாதவியும் முற்பிறப்பில் இந்திரசபையில் நடனமாடிய ஊர்வசியின் வழிவந்தவர்களே! ஒரு நாள் தேவேந்திரனின் அரச சபைக்கு அகத்தியர் வந்தார். நாரதர் வீணை வாசித்தார். தோரி மடந்தை வாரம் பாடினாள். அகத்தியரின் மனதை மகிழ்விக்க ஊர்வசி நடனம் ஆடுவாள் எனச் சபையோர் எதிர்பார்த்தனர். ஆனால் ஊர்வசி இந்திரன் மகன் சயந்தன் மீது மோகம் கொண்டு மயங்கி நின்றாள். சயந்தனும்

ஊர்வசியின் காதலில் மயங்கி நின்றான். இதனால் நாரதரின் வீணை மங்கலமிளந்தது.

இதனைக் கண்டு அகத்தியர் சினங் கொண்டு **"உங்கள் உள்ளங்கள் காமங் கொண்டு மோகித்தமையால் புனிதமான நாட்டியக் கலைக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. எனவே நீங்கள் இருவரும் பூலோகத்திலே பிறக்கக் கடவீர்"** எனச் சாபமிட்டார். அகத்தியரின் சாபத்தினால் சயந்தன் கோவலனாகவும், ஊர்வசி மாதவி என்னும் நாட்டியக் கணிகையாகவும் காவிரிப் பூம்பட்டினத்திலே பிறந்தார்கள். கண்ணகி, கோவலன், மாதவி பிறப்புப் பற்றியும் - வேறு வகையாகவும் பேசப்படுகிறது. மதுரையை மதிகுலபாண்டிய மன்னன் ஆண்ட போது அவன் தனக்குக் குழந்தை வேண்டிக் காளிதேவியைப் பிரார்த்தித்தும் அவனுக்குக் குழந்தை கிடைக்கவில்லை. இதனால் அவன் கோபங் கொண்டு காளிகோயிலைப் பூட்டி வைத்து **"இனி எவரேனும் கதவு திறந்து காளிதேவிக்குப் பூசை செய்யக் கூடாது"** என ஆணையிட்டான்.

அக்கால மணியரசனின் மகன் எண்ணெய் வியாபாரம் செய்து வந்தான். அவன் பாண்டிய மன்னனின் ஆணை பற்றி யாதும் அறியாதவன். அவன் ஒருநாள் எனது எண்ணெய் முழுவதும் விற்று முடித்தால் **"காளிதேவியே உனக்கு நான் எண்ணெய் ஊற்றித் தீபமேற்றுவேன்"** என வேண்டினான். அவன் வேண்டுகோளுக்கேற்ப அன்று அவனது எண்ணெய் முழுவதும் விற்று விட்டமையால் அவன் காளிதேவியின் கோயில் பூட்டை உடைத்து திருவிளக்குகளில் எண்ணெய் ஊற்றித் தீபமேற்றி வணங்கினான்.

இதை அறிந்த மதிகுலபாண்டிய மன்னன் அந்த வணிகனைப் பிடித்துக் காளி கோவிலிலே சிரச்சேதம் செய்யுமாறு காவலர்களுக்கு ஆணையிட்டான். வணிகன் சிரச்சேதம் செய்யப்பட்டபோது அவனது தலை காளிதேவியின் மடியிலே போய் வீழ்ந்தது. இதையறிந்த வணிகனின் மனைவி அரசனிடம் போய் முறையிட்டாள். அரசன் அதனைச் செவிமடுக்காமையால் மனம் நொந்தவள் காளிதேவியிடம் சென்று முறையிட்டாள்.

காளிதேவி அவளைத் தேற்றிக் **"காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் என்ற பெயரில் உன் கணவன் பிறப்பான். நீ திருக்கடையூர் பட்டினத்தில் வசந்தமாலை எனும் தாசியின் வயிற்றிலே மாதவி எனும் பெயரிலே பிறப்பாய். பாண்டியன்தேவிகோவிலங்கியின் வயிற்றிலே நான் கண்ணகி எனும் பெயரில் பிறப்பேன்."** —எனக் காளிதேவி வணிகனின் மனைவியிடம் கூறினாள்.

காளிதேவி கூறியவாறு வணிகனும் - மனைவியும் : கோவலனாகவும் - மாதவியாகவும் பிறந்தார்கள். கோவிலங்கிக்குக் குழந்தையாகக் காளிதேவி பிறந்தார். காளிதேவி பாண்டிய தேவிக்குக் குழந்தையாகப் பிறந்தபோது மார்பில் மாலையும், காலில் சிலம்பும், இடக்கையில் செப்பேடும் கொண்டு காணப்பட்டது. இதைக் கண்ணுற்ற

மதிகுலபாண்டிய மன்னன் வேதியரை அழைத்துச் சோதிடம் பார்த்தான். சோதிடர் குழந்தையைப் பார்த்து :-

"காலில் செஞ்சிலம்பு கையில் செப்பேட்டுடன்
நீலியுதிக்கவே நேர்ந்தது கேடுடன்
கொடி சுத்தி வந்தால் நலமுந்தாங்காது
முடியிதன்மேல் உனக்கு என்று மிலங்காது
மாலையிருக்குது மதுரைக்கடுக்காது
பாலை நிலத்தைப் போல் ஆகும் விடுக்காது"

என்று உரைக்கிறார். பாண்டியன்யாது செய்வேன் என்றான். அக் குழந்தையைப் பேழையுள் வைத்து ஆற்றிலே விடு என்றான் சோதிடன்.பாண்டியன் அவ்வாறே செய்தான். கப்பலிலே வாணிபம் செய்து வரும் மானாய்கன், மாசாத்துவன் ஆகிய இரு வணிகர்களும் தமக்குக் கிடைக்கும் பணத்தில் பெரும் பகுதியை தானமாக வழங்கி வந்தனர். இவர்களுக்கு மன்னனின் செல்வாக்கும் ஆதரவும் இருந்ததனால் மாசாத்துவான் பெரும் செல்வந்தனாக விளங்கினான்.

பன்னிரெண்டு வயதிலே கண்ணகி எழிலுடன் விளங்கினாள்.காலம் கனிந்தது. கோவலனின் அறிவு, அழகு, வண்ணம் ஆகியவற்றைக் கண்ட கண்ணகி இவன் செவ்வேளோ! – என எண்ணிக் காதல் கொண்டாள். கோவலனும் - கண்ணகியைக் கண்டு இவள் திருமகளோ! இவள் பேரழகியாக இருக்கிறாளே! – என எண்ணி மையல் கொண்டான். மானாய்கனும் - மாசாத்துவனும் இவர்கள் மனநிலை கண்டு இருவருக்கும் திருமணம் செய்து வைத்தனர். திருமண வைபவத்தன்று மாதவியின் நடன நிகழ்வு இடம்பெற்றது. விதி கூட்ட நாட்டியத்தாரகை மாதவியின் பேரழகில் மயங்கிய கோவலன் கண்ணகியைத் துறந்து, திருக்கடையூருக்கு மாதவியுடன் சென்றான். மனம் வருந்திய கண்ணகி ஓலை அனுப்புகிறாள். மடல் கண்ட கோவலன் மாதவியைப் பிரிந்துவர முடிவு செய்கிறான். அப்போது மாதவி கோவலனிடம் ஒரு மரைக்கால் பொன் கேட்டிருந்தாள். கண்ணகியிடம் கோவலன் வந்ததும், மாதவிக்குப் பொன் கொடுக்க கண்ணகியிடம் கேட்டான்.

கண்ணகியோ தன் காற்சிலம்பைக் கழற்றிக் கொடுக்கிறாள். கண்ணகி தன் கணவனின் துயர் துடைக்கத் தன் காற்சிலம்பைக் கழற்றிய போது "அச்சிலம்பு மதுரைக்குப் போனால் மடிவீர்" எனக் கூறியதையும் செவிடுக்காது கோவலனும் - கண்ணகியும் மதுரைக்குச் சென்றனர். மதுரையிலே மாதரியின் வீட்டில் ஐயையிடம் கண்ணகியை ஒப்படைத்து, கோவலன் சிலம்பு விற்க மதுரைக்குச் சென்றான். பாண்டியன் தேவியின் காற்சிலம்பொன்று உடைந்திருந்ததால் அதைத் திருத்தப் பொற்கொல்லரிடம் கொடுத்தனர். அவன் சிலம்பை மதிலில் வைத்து விட்டுச் சாப்பிடச்

சென்றான். அவ்வேளை கருடன் வந்து சிலம்பைத் தூக்கிச் சென்றது. இந்நிலையிலே மதுரை வீதியிலே சிலம்பு விற்கக் கோவலன் வந்தான். கோவலனைக் கண்ட பொற்கொல்லர் கருடன் கொண்டு சென்ற பொற்சிலம்புக்குப் பதிலாக கோவலனின் சிலம்பைப் பெற எண்ணி சிலம்பு திருடிய கள்வன் இவனே எனப் பாண்டியனிடம் கூறினான். பாண்டியன் ஆராயாது கொல்லனின் வாய்மொழி கேட்டு, கோவலனைக் காளிகோவிலில் கொன்று விட்டு சிலம்பைக் கொண்டு வருமாறு ஆணையிட்டான்.

கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி சில யாதவகுலச் சிறுவர்களுடன் கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் சென்றாள். கண்ணகி கோவலனின் வெட்டுண்ட தலையை உடலுடன் தன் மடியில் வைத்து இணைக்க கோவலன் உயிர் பெற்று எழுந்தான். கோவலன் தனக்கு நேர்ந்த கொடுமைகளைக் கண்ணகிக்குக் கூறினான். கோவலன் கூறியதைக் கேட்ட கண்ணகி பாண்டியனின் அரண்மனைக்கு வழக்காடச் சென்றாள். தன் வழக்கை உண்மையாக்க தன் பேழையுள் இருக்கும் ஒற்றைச் சிலம்பை அழைத்தாள். அச்சிலம்பு கண்ணகியின் கைக்கு வந்தது. அப்போது பாண்டியன் கண்ணகியிடம் உன் சிலம்பு எங்கே? என்றான். கண்ணகி காற்சிலம்பைத் தூக்கிச் சென்ற கருடனை நினைக்க, கருடன் சிலம்பைக் கண்ணகியிடம் கொடுத்தது. பாண்டியன் உன் சிலம்பின் உள்ளீடு என்ன? என்றான். கண்ணகி மாணிக்கப் பரல்கள் என்றாள். பாண்டியன் தனது தேவியின் சிலம்பின் உள்ளீடு முத்துப்பரல்கள் என்று கூறி – கண்ணகியின் சிலம்பை உடை என்றான். கண்ணகி சிலம்பை உடைத்தாள். மாணிக்கப் பரல்கள் சிதறிக் கோவலனைக் கொலை குறித்த வாயில் அடித்து வீழ்ந்தது.
பாண்டியன் நானே கள்வன். ஒரு தூயவனைக் கொலை குறித்த கொலைஞன்! என்று மெய் சோர்ந்து சிங்காசனத்திலிருந்து கீழே வீழ்ந்து இறந்தான். இதைக் கண்ட கோப்பெருந்தேவி தானும் உடன் கட்டை ஏறினாள்.

கண்ணகி ஆவேசங் கொண்டு தனது இடது தனத்தைத் திருகி மதுரையை மும்முறை வலம் வந்து எறிந்தாள். அது நல்லோரை விட்டுத் தீயோரை அழித்தது. மதுரை மேற்கு வழியாகத் தனியாகக் கண்ணகி சென்றாள். வைகைக்கரை வழியே நடந்து செங்கோட்டு மலையிலே ஏறினாள் வீரபத்தினி.

**"தெய்வம் தொழா அன் தொழு நற் றொழுவாளைத்**
**தெய்வந்த தொழுந்தகமை திண்ணிதால் - தெய்வமாய்**
**மண்ணக மாந்தர்க் கணியாய் கண்ணகி**
**விண்ணக மாந்தற்கு விருந்து"**

வேங்கை மரநிழலிலே விளங்கிய வீரபத்தினியை மலைக்குன்றில் வாழும் குன்றக் குறவர் கண்டு **"எங்கள் மனம் நடுங்க ஒற்றை முலையுடன் இங்கு நிற்கும்**

**தாங்கள் யார்?"** என வினவினர். பாண்டியன் என் கணவனைக் கள்வன் எனக் கொலை செய்தான். அவனுடன் வழக்காடி என் கணவனை இழந்து இங்குற்ற கடுவினையேன் யான் என்றாள் வீரபத்தினி. அதைக் கேட்டுக் குறவர் அஞ்சினர். அப்போது கோவலன் தோன்றினான். இந்நிலையில் குறவர்கள் வாழ்த்த கண்ணகி – கோவலனுடன் விமானமேறி விண்ணுலகம் சென்றாள். இத்தகைய தெய்வக் கண்ணகிக்கு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஒவ்வொரு வைகாசிப் பூரணையிலும் பெருவிழா எடுக்கப்படுவது கண்கூடு!!!

## பாடசாலை மாணவர்களுக்காக "தென்றல்" நடாத்தும் மாபெரும் கட்டுரைப் போட்டி -2015

1. உங்கள் அபிமானத் **"தென்றல்"** சஞ்சிகை மட்டக்களப்பு குருமண்வெளியைச் சேர்ந்த எழுத்தாளர் அருள்செல்வநாயகத்தின் குடும்பத்தாருடன் இணைந்து அருள் செல்வநாயகத்தின் நினைவாக மாபெரும் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.
2. இக் கட்டுரைப் போட்டியை வருடா-வருடம் நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.
3. கட்டுரைத் தலைப்பு **"இலக்கிய உலகில் அருள்செல்வநாயகத்தின் படைப்புக்கள்"**
4. இப் போட்டியில் பாடசாலைகளில் தரம் 10,11,12,13 இல் கல்வி கற்கும் சகல மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
5. எழுதி அனுப்பி வைக்கப்படும் கட்டுரைகள் 300 சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
6. கட்டுரைகள் புள்ஸ்கப் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டு, பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
7. அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் தினம் ஜூலை-30.
8. இப்போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு முதல் பரிசாக 3000/= வும், இரண்டாம் பரிசாக 2000/= வும், மூன்றாம் பரிசாக 1000/= வும் வழங்கப்படும். அத்தோடு ஆறுதல் பரிசாக ஐவருக்குத் தலா 500/= வும் வழங்கப்படும்.
9. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
10. இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகள் உங்கள் அபிமானத் **"தென்றலில்"** பிரசுரிக்கப்படும்.
11. தென்றல் கட்டுரைப் போட்டி,44/1 பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு கட்டுரைகள் அனுப்பபடல் வேண்டும்.

# இந்து வேதங்களும் திருமுறைகளும் தத்தவங்களும் மனித இனப் பேரன்பையே போதிக்கின்றன

- அருட்கலாநிதி S.A.I. மத்தியு -

பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே சமயமாகும். **"சேவையும், தியாகமுமே நமது தேசிய குறிக்கோள்"**- என்று சமயத்திற்கு இலக்கணம் வகுத்தவர் சுவாமி விவேகானந்தர்.

கருமத்தாலோ, மக்கட் பேறாலோ, பொருளாலோ அன்று தியாகத்திலே, தான் சிலர் சாகா நிலையை அடைந்திருக்கின்றனர் - என்று மிகப் பழைமையான உபநிடதங்கள் கூறுகின்றன.

**"மனத்தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது - இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமாகும் . ஏழையிடம், பலவீனரிடமும், நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் இறைவனை வழிபடுபவனாவான். சிலையில் மட்டுமே அவரைக் காண்பவரின் வழிபாடு ஆரம்ப நிலையிலுள்ளது".** என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். இறைவனுடைய முழுமையான அருளைப் பெற வேண்டுமானால் அவரது குழந்தைகளான மனிதருக்குச் சேவை செய்ய வேண்டும். பிறர் துயர் துடைப்பது அறநெறிக் கோட்பாடுகளுள் மேலானதாகப் போற்றப்படுகிறது. ஒவ்வொரு இந்து நிறுவனமும் தங்கள் மேலான சேவையைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

எங்கும் - எதிலும் நல்லதைக் கண்டு - நல்லதைச் செய்து - நல்ல காரியங்களுக்கு வரவேற்பளித்து வருபவர்கள் இந்துப் பெருமக்கள் என்றால் அது மிகையாகாது. கண்ணியமும், கட்டுப்பாடும், ஒழுக்க நெறிகளும் தன்னகத்தே கொண்டது இந்து சமயமாகும்.

**"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி -ஆங்கே மாதொரு பாகனாய்த் தாம் வருவர்"** என்ற பரந்த கொள்கை மேலும் உயர்வு பெற்று வருவதும் இந்துசமயமே. இதனால் தான் இந்துசமயம் உலகளாவிய ரீதியில் பரவிக் வேரூன்றிக் காணப்படுகிறது.




தீபாவளி இந்தியாவில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும். இது இந்துக்கள் பண்டிகையெனப் பலரும் நினைத்துள்ளார்கள். இதனை இந்துக்கள் மட்டுமல்லாது, பல்வேறு மதத்தவர்களும் வெவ்வேறு விதங்களில் கொண்டாடுகிறார்கள்.

தீபங்களின் ஆவளியான தீபாவளியை நம்மவர்கள் விளக்குகளால் அலங்காரம் செய்து கொண்டாடவில்லையெனினும் வடநாட்டவர் மாலை நேரங்களில் விளக்குகால் வீட்டை அலங்கரித்துக் கொண்டாடுகின்றனர். தீபாவளிக்குப் பத்து நாட்கள் முன்பிருந்தே மின் விளக்குச் சரங்களால் வீடுகள் அலங்கரிக்கப்படுகின்றன.

நமது பொங்கல் பண்டிகை போலானது வடக்கிந்திய தீபாவளி. இது மூன்று நாட்கள் கொண்டாடப்படும். தீபாவளியின் முதல் நாள் வீட்டைச் சுத்தம் செய்து, பழைய சாமான்களை எரிப்பதாகும். இந்த நாள் **"நரக்சௌதஸ்"** என அழைக்கப்படுகிறது. வீட்டின் பழைய பொருட்களை வெளியேற்றி விட்டு வாசலில் சிறு அகல் தீபம் ஏற்றிவைக்கப்படுகிறது. வீடு முழுவதும் சுத்தம் செய்யப்படும் நாளிது.

இதே முதல்நாள் **"ரூப்சௌதஸ்"** என மார்வாடிக் குடும்பங்களால் கொண்டாடப்படுகிறது. பெண் அழகாகும் நாள் எனப் பொருள்பட அந்த நாளில் பெண்கள் முகம், கைகளில் கடலைமாவு மற்றும் பிற அலங்காரப் பத்துக்களையும் இட்டு அழகுறும் நாள்.

தீபாவளிக்கு இரு வாரங்களுக்கு முன்னால் துர்க்கா பூஜை வடஇந்திய வீடுகளில் கொண்டாடப்படும். இது நவராத்திரியின் கடைசி நாளாகும். துர்க்கா பூஜாவிலிருந்து பதினைந்து முதல் இருபது நாட்களுக்குப் பின்னர் தீபாவளி

தினத்தன்று கொண்டாடப்படுவது லக்ஷ்மி பூஜா. தீபாவளி தினத்தன்று காலை உறவினர்களுக்குள் பரிசுகள் பரிமாறி, மகிழ்ச்சியைக் கொண்டாடி மாலை குடும்பம் முழுக்கக்கூடி லட்சுமி தேவியை வணங்கும் நன்னாள்.

தீபாவளி தினத்தன்று லட்சுமி பூஜை சிறப்பிக்கப்படுவதால் அன்றிரவு லட்சுமிதேவி தங்கள் வீட்டிற்கு வருவதாக எண்ணி இரவு முழுவதும் கதவை மூடாது இருப்பார்கள். வீடு பூட்டியிருந்தால் வரும் லட்சுமி (செல்வம்) திரும்பிப் போய் விடுவதாக நம்புகிறார்கள்.

தசரா தினத்தன்று இராவணனை அழித்து, இலங்கையிலிருந்து சீதையை அழைத்துக் கொண்டு இராமன் அயோத்தியை அடையும் தினத்தன்று அவர்களை வரவேற்கும் விதமாக அனைவரும் தீபமேற்றி, இனிப்புக்கள் பகிர்ந்துண்ணும் நாளே வடக்கில் தீபாவளி.

இந்துக்கள் மட்டுமன்றி சீக்கியர்கள் மற்றும் ஜெய்ன் சமயத்தவரும் தீபாவளி கொண்டாடுகின்றனர். முகலாய மன்னர் ஜஹாங்கிரால் சிறையிலடைக்கப்பட்டிருந்த சீக்கியர்களின் ஆறாம் குரு ஹர்கோபிந்த்சிங் குவாலியர் கோட்டையிலிருந்து 1916 இல் விடுதலை செய்யப்பட்ட நாளாக தீபாவளி நாளைச் சீக்கியர்கள் கொண்டாடுகிறார்கள். இந்த நாளில் அம்ரிஸ்தரின் பொற்கோயில் முழுக்க விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுஇ அவற்றின் ஒளி சூரியஒளியில் பட்டு ஒளிர்வது கண்கொள்ளாக் காட்சி.


இந்தியாவில் மட்டுமன்றி, பூர்வீக இந்தியக் குடிகள் அதிகமிருக்கும் சிங்கப்பூரிலும் தீபாவளி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தீபாவளிக்குப் பத்து நாட்கள் முன்பதாகவே நகரமெங்கும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, விழாக்கோலம் பூண்டுவிடும். தீபாவளிக்கு விடுமுறை மட்டுமன்றி, பல கலைநிகழ்ச்சிகளையும் - பொருட்காட்சிகளையும் ஏற்பாடு செய்து பூர்வீக இந்தியக் குடிகளை மகிழ்விக்கிறது அந்நாட்டரசு.

சிங்கப்பூர் தவிர்த்து மற்ற நாடுகளில் குடும்பங்களுக்குள்ளும் - நண்பர்களுக்குள்ளும் கொண்டாடும் ஒரு நாளே தீபாவளியாகும். அதையும் மீறிய பெரிய கூட்டமெனில் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் அமெரிக்கா, துபாய் போன்ற நாடுகளில் பட்டாசு வெடிக்கத்தடையிருப்பதால் நம் மக்கள் தமிழ்ச் சங்கங்களில் நிகழ்ச்சிகள் நடத்தியும், கோயில்களுக்குச் சென்றும், இனிப்புக்கள் பரிமாறியும் கொண்டாடி வருகின்றனர்.

# சமைக்கலாம் வாங்க...!!!

## காரத்தோசை













### தேவையான பொருட்கள்

பச்சரிசி — 1/2கப்

துவரம் பருப்பு— 1/4 கப்

தேங்காய்- 1/2

மிளகாய் - 4

சீரகம் - 1/2 டீஸ் பூன்

மிளகு— 10

உப்பு—1/2 டீஸ் பூன்

வெங்காயம் - சிறு அளவு

கறிவேப்பிலை — சிறிதளவு

### செய்முறை :

1. அரிசி, பருப்பை அரைமணி நேரம் ஊறவைக்கவும்.
2. இதனுடன் மேலேயுள்ள அனைத்துப் பொருட்களையும் சேர்த்து சிறிய ரவைப் பதத்துக்கு அரைத்துக் கொள்ளவும்.
3. எண்ணெயில் கடுகு தாளித்து, அரைத்து வைத்துள்ள மாவில் கொட்டிக் கலக்கவும்.
4. தேவையெனில் சிறிதளவு நீர் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.
5. பின்னர் தோசைக் கல்லில் மாவை ஊற்றித் தோசை செய்யலாம்.


தொகுப்பு :-

திருமதி கவிதா கிருபாகரன்


ஆரையம்பதியில்.....
அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி
அபிராம் ஜீவல்ஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008


ஆழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி
சொர்ணம்
நகை
மாளிகை
AD/0040
16, புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152
212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860
59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191


Ladshana Stamp
-Computer Rubber Stamp Maker-
Rubber Stamp
Plastic ID Card
Mug, Tile Print
Photo Frame
Certificate/Invitation
Name Board
# 39A, Baily Road, Arasady, Batticaloa.
Tel: 065 222 4048, 077 69 155 74.
e-mail: ladshana@gmail.com
AD/0024



இல.20

# தென்றலின் குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | 6 | |
| 7 | | | | ■ | 8 | | |
| | | 7 | ■ | 9 | | | ■ |
| ■ | | ■ | 10 | | ■ | ■ | 11 |
| 12 | ■ | 13 | | | 14 | ■ | |
| 15 | 16 | | ■ | 17 | | 18 | |
| 19 | | | 20 | ■ | 21 | | |
| 22 | | ■ | 23 | | | ■ | ■ |

## இடமிருந்து வலம்

1. கடிதம் உரியவர்களிடம் சேர்வதற்கு இது அவசியம் தேவை.
5. படமெடுத்தாடும் பாம்பு.
7. பல் குத்த உதவும்.
8. அண்ணனுக்கு இளையவன்.
9. இவர் அமைவது தலைவிதிப்படி என்பர். (குழம்பியுள்ளது)
10. மதுவைப் போல் மயக்கம் தருபவள். (திரும்பியுள்ளது)
13. செயல்.
15. காடு.
17. முருங்கை மரத்தில் தலைகீழாகத் தொங்கியது. (திரும்பியுள்ளது)
19. ஆயிரம் கோடி பணமிருந்தாலும் வீட்டிலே இது வேண்டும்.
21. குழந்தை. (குழம்பியுள்ளது)
22. விடியல். (திரும்பியுள்ளது)
23. பசுமையின் நிறம். (திரும்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

1. வயோதிபம்
2. இது கட்டோடிருந்தால் எறும்பு தானாக வரும்.
3. புதுமை.
4. வைக்கோல் திரிக்கப்பட்ட கயிறு. (தலைகீழ்)
5. ஒலி.
6. தண்ணீர் குடித்தால் இது அடங்கும். (குழம்பியுள்ளது)
9. சூரபத்மன் இறுதியில் இந்த மரமாக நின்றான். (குழம்பியுள்ளது)
10. இரும்புக் கரள்.
11. மங்கலமான காரியங்கள் நடைபெறும் நேரம்.
12. அர்ச்சுனர் பாசுபதம் பெறுவதற்கு மரமேறல்.
13. விவசாயம். (குழம்பியுள்ளது)
14. வெள்ளம் நிற்குமிடம். (தலைகீழ்)
16. இன்னிசைப் பாடல். (குழம்பியுள்ளது)
18. முன்னறி தெய்வத்துள் ஒருவர். (தலைகீழ்)
20. திக்கு.

விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர் களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிக ளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக300/- 200/-, 100/- வழங்கப்படும்.

போட்டி முடிவுத்திகதி 01.09.2015

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல. 20**
**44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி,**
**மட்டக்களப்பு.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 19 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பு | 2 ல | 3 மை | 4 | 3 கை | லா | 4 ய | ம் |
| 5 ண் | ப | | 6 ல் | தோ | | மை | |
| ணி | | 7 சை | இ | | 8 ந | க | 9 ல் |
| ய | | ர் | | 10 வி | தை | | த |
| 11 ம் | 12 ச | ச் | 13 அ | | 14 த் | 15 து | மு |
| | 16 த் | ச | த | ம் | | ரு | |
| 17 மா | து | | ர | | 18 சை | வ | ம் |
| 19 சி | ரு | | ம் | | 20 அ | ம் | பு |

**தென்றல் குறுக்கெழுத்துப் போட்டி இல-19 இல் வெற்றி பெற்றோர்**

**முதலாம் இடம்**
த.கௌரி
பிரதான வீதி
பாண்டிருப்பு -1.

**இரண்டாம் இடம்**
ம.ஜெயபாலன்
கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் இடம்**
ந.சினேகா
பாடசாலை வீதி
கரடியனாறு.

**பாராட்டுப் பெறுவோர்**
சி.அபர்ணா
மட்டக்களப்பு
ப.புவஸ்ரிகா
களுவாஞ்சிகுடி.

ம.ஜெயநிதி
வவுனியா
உ.மதிவதனி
மண்டூர்.




# திருமலை-கோணேஸ்வராவை வீழ்த்தி மட்டு-சிவானந்தா கிண்ணத்தைச் சுவீகரித்தது!!!

முதன் முதலாக வர்ணச் சீருடையில் இடம்பெற்ற மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலைக்கும் - திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 22 ஆவது பொன் அணிகளின் கடினபந்து கிரிக்கெட் போட்டியில் சிவானந்தா தேசிய பாடசாலை அணி 56 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இப் போட்டி மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் 16/05/2015 அன்று இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய சிவானந்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இந்நிகழ்வுக்கு ஶ்ரீமத் சுவாமி சர்புஜானந்தா, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி, கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி கே.ரி.சுந்தரேசன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.



### புலமைத்தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காகத்

# "தென்றல்" நடத்திய முன்னோடிப் பரீட்சை-03 இல் சித்திபெற்றோர்

**மட்/கடுக்காமுனை வாணி வித்தியாலயம்**

சு.டிபானுசன்-141புள்ளிகள்
வ.தனுலக்சி-106புள்ளிகள்
இ.விதுர்ஷன்-117புள்ளிகள்
க.உஷாளினி-113புள்ளிகள்
ர.சாளினி-104புள்ளிகள்

**மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்**

ந.குகனியா-145புள்ளிகள்
லோ.சரணியா-140புள்ளிகள்
ஆ.டிலுக்ஷா-141புள்ளிகள்
சு.திவாகரி-105புள்ளிகள்
ச.ஜிவேனிதா-128புள்ளிகள்
சி.ஜேதிசா-112புள்ளிகள்
இ.விதுஷா-100புள்ளிகள்
ஜெ.லுகர்ஷிகா-135புள்ளிகள்
சு.சுஜெனியா-109புள்ளிகள்
தி.ஹர்ஷாணி-121புள்ளிகள்
க.யதுஷாயினி-108புள்ளிகள்
சி.திருஷியா-108புள்ளிகள்
தெ.டனுப்பிரியா-128புள்ளிகள்
சி.ஜேதிசன்-146புள்ளிகள்
ப.அபிலாஷ்-112புள்ளிகள்
இ.யதுஷன்-100புள்ளிகள்
கு.யுபீஜனன்-125புள்ளிகள்

**மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்**

பா.அனுசன்-101புள்ளிகள்
க.டிபானுசன்-137புள்ளிகள்
யோ.டிலக்ஷன்-114புள்ளிகள்
சி.கரிதுஜன்-107புள்ளிகள்
பா.தர்சினி-131புள்ளிகள்
சி.வித்தகன்-113புள்ளிகள்
ச.தனுஸ்காந்-114புள்ளிகள்
த.அர்ச்சனா-112புள்ளிகள்

**மட்/கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித்தியாலயம்**

வி.யதிசன்-138புள்ளிகள்
நா.ரனோஜன்-103புள்ளிகள்
ச.டிதுர்ஷிகா-155புள்ளிகள்
மோ.சானுகா-137புள்ளிகள்
சா.தரணி-126புள்ளிகள்
ச.திவ்வியா-128புள்ளிகள்
க.வஜிந்திரா-143புள்ளிகள்
த.கஜரூபன்-119புள்ளிகள்
சி.அவிநயன்-110புள்ளிகள்
க.விசுதா-108புள்ளிகள்
சி.கலிஸ்ரா-101புள்ளிகள்
கு.டனுசிந்-137புள்ளிகள்
கு.நிதுர்ஷன்-100புள்ளிகள்
அ.சனுசன்-144புள்ளிகள்
ந.கேசோல்-124புள்ளிகள்
சி.சிறிசினி-114புள்ளிகள்

**மட்/வவுணதீவு**
**பரமேஸ்வரா வித்தியாலயம்**
சோ.ஜெயதர்மினி-118புள்ளிகள்
சோ.ஜெயதாரணி-109புள்ளிகள்

**மட்/வால்கட்டு அ.த.க.பாடசாலை**
த.சோபினிகா-141புள்ளிகள்
பு.ஷர்மிகா-111புள்ளிகள்
பு.தர்மிகா-122புள்ளிகள்
ச.கிதுசன்-111புள்ளிகள்

**மட்/முனைக்காடு சாரதா**
**வித்தியாலயம்**
இ.விவேக்காந்-104புள்ளிகள்
சி.கோபிநிதன்-140புள்ளிகள்
ப.சதீஸ்காந்தன்-122புள்ளிகள்
ம.டேஸ்கரன்-123புள்ளிகள்
ப.நிலுக்ஷி-107புள்ளிகள்
கு.கஜேந்தினி-140புள்ளிகள்
த.விசித்திரா-110புள்ளிகள்
நா.கேதீஸ்வரி-112புள்ளிகள்
வே.உசாநந்தினி-103புள்ளிகள்
ந.டிலோஜினி-101புள்ளிகள்

**மட்/முதலைக்குடா**
**கனிஷ்ட வித்தியாலயம்**
மோ.தவநிதி-150புள்ளிகள்
ப.கஜேசங்கரி-104புள்ளிகள்
மே.கரிஸ்கா-132புள்ளிகள்
ந.யதுசாழினி-142புள்ளிகள்
சி.புவனிக்கா-141புள்ளிகள்
த.ஜக்சாயினி-150புள்ளிகள்
ப.கதுசினி-117புள்ளிகள்
கோ.மிதுசானி-131புள்ளிகள்

**மட்/அம்பிளாந்துறை கலை**
**மகள் மகா வித்தியாலயம்**
ஞா.டிசானன்-114புள்ளிகள்
வி.ஓவியா-165புள்ளிகள்
இ.தமிழ்ரூபிகா-106புள்ளிகள்
தே.பிரவிந்-118புள்ளிகள்
க.லிதுர்ஷனா-109புள்ளிகள்
வே.திவேனிக்கா-163புள்ளிகள்
ர.சதுர்ஜினி-130புள்ளிகள்
பி.டிலக்சனா-107புள்ளிகள்
அ.அபிநயா-111புள்ளிகள்
கி.தீபகாந்தி-148புள்ளிகள்
ல.கிசாந்தினி-101புள்ளிகள்

**மட்/படையாண்டவெளி**
**அ.த.க.பாடசாலை**
வி.யதுர்ஷிகா-117புள்ளிகள்

**மட்/மகிழடித்தீவு அ.த.க.பாடசாலை**
கி.கிஷோமியா-146புள்ளிகள்
அ.விபிசன்-150புள்ளிகள்
மா.மதுஜா-119புள்ளிகள்
ம.சுமர்த்தனா-149புள்ளிகள்
மே.ஜிர்ஷா-142புள்ளிகள்
ந.கிரிஷன்-134புள்ளிகள்
க.கோமிகா-117புள்ளிகள்
சு.நிருஷிகா-127புள்ளிகள்
பொ.கார்த்திகா-134புள்ளிகள்
ச.ஜேனுஷன்-132புள்ளிகள்
ச.திருஷ்ஷனா-134புள்ளிகள்
கு.துஷாயினி-126புள்ளிகள்
வி.டேனுஜா-144புள்ளிகள்
சி.டெனுஷன்-100புள்ளிகள்
வி.மனோசிதன்-149புள்ளிகள்
மு.தர்சிக்கா-130புள்ளிகள்
சி.டினுஸ்கா-114புள்ளிகள்

**மட்/பண்டாரியாவெளி**
**நாமகள் வித்தியாலயம்**
பு.ரிஜானி-102புள்ளிகள்
இ.ரொசாளினி-115புள்ளிகள்
த.கிருஸ்ணகோபன்-106புள்ளிகள்

**மட்/கோட்டைமுனை கனிஷ்ட**
**வித்தியாலயம்**
கி.பிரியவத்சலன்-134புள்ளிகள்








இவ்வாண்டு தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளரும், மட்டக்களப்பு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவருமான அல்ஹாஜ் A.l.மீராசாகிபு கோட்டமுனைக் கனிஷ்ட வித்தியாலயம், மெதடிஸ்த மத்தியகல்லூரி, மகாஜனக் கல்லூரி உட்பட 35 க்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு அண்மையில் வழங்கி வைத்தார்.







* நாள்தோறும் சுகாதாரமான, போஷாக்கான உணவுகள்
* பாடசாலை சென்றுவர சிறந்த போக்குவரத்து வசதி
* ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சிக்கான விளையாட்டுகள்
* பொருத்தமான நவநாகரீக உடைகள்
* வருடத்திற்கொருமுறையாவது சுற்றுலா
* சிறந்த நண்பர்கள்?
* கணனி அல்லது மடிக்கணனி வசதிகள்
* பயனுள்ள Video games....



இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் அலசி ஆராய்ந்து முடிவு பண்ணுறவங்க அவங்க பிள்ளைகளுக்கான ஆங்கிலக் கல்வி என வரும் போது நிச்சயமாக **Headway**ஐ தான் தெரிவு செய்வாங்க. ஏனென்றால் எங்ககிட்ட இருக்கு.

* சிறந்த, British Council இனால் பயிற்றப்பட்ட ஆசிரியர் குழாம்
* 15 வருடகற்பித்தல் அனுபவம்
* Speaking, Listening, Reading and Writing என அனைத்தும் ஒருங்கிணைந்த பாடப்பரப்பு
* Library வசதிகள்
* உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பிற்கு உதவக் கூடிய சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்கள்
* Multimedia தொழில்நுட்பத்துடன் கூடிய கற்பித்தல்
* Friendly environment
* மாணவர்களில் தனிக் கவனஞ்செலுத்தக்கூடியதாக 15 தொடக்கம் 20 பேர் கொண்ட சிறிய வகுப்புகள்

# HEADWAY
## SCHOOL OF LANGUAGES

**Batticaloa Office:**
**Headway Kids' Corner,**
**YMCA Building,**
**Boundary Road (South),**
**Batticaloa T: 065 2225612**

**Kalmunai - Franchise:**
**Headway Kids' Corner,**
**RKM School Road,**
**Kalmunai T: 077 9080550**

*Enjoy Learning English*

வனசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. (WP1301)